# மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2023 - 2024

### மானியக் கோரிக்கை எண். 52

## மு.க. ஸ்டாலின்
முதலமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2023

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டை வழங்குதல் (NIDC Card) | 7 |
| 3. | உரிமைகள் திட்டம் ('RIGHTS' Project) | 8 |
| 4. | மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016 | 13 |
| 5. | தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை பதிவு செய்தல் மற்றும் அங்கீகாரம் அளித்தல் | 18 |
| 6. | மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் | 19 |
| 7. | நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனங்கள் | 23 |
| 8. | ஆதரவற்ற மனநலம் சார் மாற்றுத் திறனாளிகளுக்கான மீட்புத் திட்டம் | 24 |

| | | |
|---|---|---|
| 9. | மறுவாழ்வு இல்லங்கள் | 25 |
| 9.1. | அறிவுசார் மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு இல்லங்கள் | 25 |
| 9.2. | மனநலம் சார் மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு இல்லங்கள் | 26 |
| 9.3. | இடைநிலை பராமரிப்பு மையங்கள் | 27 |
| 9.4. | தொழுநோய் சார்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு இல்லங்கள் | 28 |
| 9.5. | அறிவுசார் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான பகல்நேர பராமரிப்பு மையங்கள் | 31 |
| 9.6. | தசைச்சிதைவு நோய் சார் மாற்றுத்திறனாளிகளுக்கான பகல்நேர பராமரிப்பு மையங்கள் | 32 |
| 9.7. | முதுகு தண்டுவடம் சார் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு இல்லங்கள் | 33 |
| 10. | மாநில வள மற்றும் பயிற்சி மையங்கள் | 34 |

| | | |
|---|---|---|
| 11. | சிறப்புக் கல்வி | 35 |
| 11.1. | சிறப்புப் பள்ளிகள் | 35 |
| 11.2. | அரசு சிறப்புப் பள்ளிகள் | 36 |
| 11.3. | அரசு சாரா தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சிறப்புப் பள்ளிகளுக்கான நிதியுதவி | 38 |
| 11.4. | கல்வி உதவித்தொகை | 40 |
| 11.5. | வாசிப்பாளர் உதவித்தொகை | 42 |
| 11.6. | தேர்வெழுத உதவுவோருக்கான உதவித்தொகை | 43 |
| 11.7. | இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டு வழங்கப்படும் ஊக்கத்தொகை | 44 |
| 11.8. | சட்டம் பயின்ற பட்டதாரி மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கான உதவித்தொகை | 45 |
| 11.9. | செவி மற்றும் பேச்சு மாற்றுத்திறன் மாணவர்களுக்கான பி.காம்., பி.சி.ஏ., பட்டப்படிப்பு | 46 |

| | | |
|---|---|---|
| 11.10. | இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா கல்வி ஆராய்ச்சி நிறுவனம் (RKMVERI), கோயம்புத்தூர் | 48 |
| 12. | உதவி உபகரணங்கள் | 49 |
| 12.1. | பல்வேறு வகையான உதவி உபகரணங்கள் | 49 |
| 12.2. | மாற்றுத்திறனாளிகள் தாங்கள் விரும்பும் உபகரணங்களை தாங்களே தேர்ந்தெடுக்கும் முறை | 53 |
| 13. | சமூக பாதுகாப்பு திட்டங்கள் | 54 |
| 13.1. | பராமரிப்பு உதவித்தொகை | 55 |
| 13.2. | அதிக உதவி தேவைப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகை | 57 |
| 13.3. | படித்த வேலைவாய்ப்பற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான நிவாரணத் தொகை | 57 |
| 13.4. | திருமண உதவித்தொகை | 59 |
| 13.5. | கட்டணமில்லா மற்றும் சலுகை கட்டணத்துடன் பேருந்து பயணத் திட்டம் | 61 |

| | | |
|---|---|---|
| 13.5.1. | 100 சதவிகித கட்டணமில்லா பயணம் | 61 |
| 13.5.2. | பேருந்து கட்டணங்களில் 75 சதவிகித பயணச்சலுகை | 62 |
| 14. | மாற்றுத்திறனாளிகளுக்கு சமூகப் பொருளாதார அதிகாரமளிக்கும் திட்டங்கள் | 63 |
| 14.1. | வேலைவாய்ப்பில் நான்கு சதவிகித இட ஒதுக்கீடு | 63 |
| 14.2. | ஒன்றிய பணியாளர் தேர்வாணையத்தின் (UPSC) அகில இந்திய குடிமைப்பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (TNPSC) தொகுதி-I முதன்மைத் தேர்வெழுத ஊக்கத்தொகை | 65 |
| 14.3 | சமவாய்ப்புக் கொள்கை | 66 |
| 14.4 | மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய நிதி மேம்பாட்டுக் கழகம் (NHFDC) | 67 |
| 14.5 | குறு தொழில் மற்றும் பெட்டிக்கடை துவங்க நிதியுதவி | 67 |

| | | |
|---|---|---|
| 14.6 | பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) | 69 |
| 14.7 | வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளி இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) | 70 |
| 14.8 | ஆவின் விற்பனை மையம் அமைப்பதற்கான நிதியுதவி | 71 |
| 14.9 | புத்தகக் கட்டுநர் பயிற்சி | 73 |
| 14.10 | பல்லூடகப் பயிற்சி மற்றும் டிஜிட்டல் புகைப்படப் பயிற்சி | 74 |
| 14.11 | பொருத்துநர் பயிற்சி | 75 |
| 15. | ஒன்றிய அரசின் திட்டங்கள் | 76 |
| 15.1 | தனித்துவம் வாய்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை (UDID Card) | 76 |
| 15.2 | மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் வழங்குதல் மற்றும் பொருத்துவதற்கான உதவித்திட்டம் (ADIP Scheme) | 77 |

| | | |
|---|---|---|
| 15.3 | தீனதயாள் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம் (DDRS) | 78 |
| 15.4 | தடையற்றச் சூழலை ஏற்படுத்தும் பிரச்சாரம் (சுகம்ய பாரத் அபியான்) | 79 |
| 15.5 | மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான தேசிய கல்வி உதவித்தொகை | 80 |
| 16. | நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் (SDGs) | 81 |
| 17. | மாநில விருதுகள் | 84 |
| 18. | உலக மாற்றுத்திறனாளிகள் தினம் | 88 |
| 19. | தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியம் | 90 |
| 20. | முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் | 94 |
| 21. | 1999-ஆம் ஆண்டு புறஉலக சிந்தனையற்ற, மூளை முடக்குவாதம், அறிவுசார் மற்றும் பல்வகை மாற்றுத்திறனாளிகளின் நலனுக்கான தேசிய அறக்கட்டளைச் சட்டம் | 95 |

| | | |
|---|---|---|
| 22. | புதிய முன்னெடுப்புகள் | 96 |
| 22.1 | வீட்டுமனைப் பட்டா வழங்குவதில் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை | 96 |
| 22.2 | வீடு ஒதுக்கீட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஐந்து சதவிகித இடஒதுக்கீடு | 96 |
| 22.3 | மாற்றுத்திறனாளி உலமாக்களின் ஓய்வூதியம் பெறும் வயதினைக் குறைத்தல் | 97 |
| 22.4 | போக்குவரத்து | 98 |
| 23. | முடிவுரை | 99 |

# அட்டவணை


| எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆரம்பநிலைப் பயிற்சி மையங்கள் | 21 |
| 2. | தொழுநோய் சார்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு இல்ல இருப்பிடங்கள் | 30 |
| 3. | கல்வி உதவித் தொகை | 41 |
| 4. | வாசிப்பாளர் உதவித்தொகை | 42 |
| 5. | இடைநிற்றலை தவிர்ப்பதற்கான ஊக்கத்தொகை | 44 |
| 6. | உதவி உபகரணங்கள் | 50 |
| 7. | பராமரிப்புஉதவித்தொகை பயனாளிகள் | 56 |
| 8. | படித்த வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான நிவாரணத்தொகை | 58 |
| 9. | தேசியக் கல்வி உதவித்தொகை | 81 |
| 10. | ஆண்டுதோறும் சுதந்திர தினத்தன்று வழங்கப்படும் மாநில விருதுகள் | 85 |

| | | |
|---|---|---|
| 11. | ஆண்டுதோறும் உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று வழங்கப்படும் மாநில விருதுகள் | 86 |
| 12. | நல வாரிய உதவிகள் | 91 |
| 13. | 2023-2024 -ஆம் நிதியாண்டிற்கான திட்ட வாரியான நிதி ஒதுக்கீடு | 100 |
| 14. | 2020–2021-ஆம் ஆண்டு முதல் 2023-2024-ஆம் ஆண்டு வரையிலான நிதி ஒதுக்கீடு | 101 |

# மாற்றுத்திறனாளிகள் நலத்துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2023-2024

## 1. முன்னுரை

தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக தனியே ஒரு துறையை ஏற்படுத்தி முன்னோடியாக பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து வருகிறது. அனைவரையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த சமுதாயத்தை அமைக்க இவ்வரசு முனைந்திருக்கும் வேளையில், "ஒரு மாற்றுத்திறனாளி கூட மனவருத்தம் அடையக் கூடாது; ஒரே ஒருவருக்கு நன்மை பயக்கும் என்றாலும் கூட, அந்தச் செயலை நாம் உடனடியாக செய்தாக வேண்டும்" என்ற உயர்ந்த கொள்கையின் அடிப்படையில் இவ்வரசு செயல்பட்டு வருகிறது. கடந்த 2010-2011-ஆம் ஆண்டு முதலே தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகளின் திறன்களை அங்கீகரித்து அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் விதமாக

‘ஊனமுற்றோர்’ என்ற சொல்லுக்கு பதிலாக ‘**மாற்றுத்திறனாளிகள்**’ என்ற வார்த்தையை உருவாக்கி பயன்படுத்தி வருகின்றது.

கடந்த 2022-ஆம் ஆண்டில் உலக மாற்றுத் திறனாளிகள் தினமானது தமிழ்நாடு அரசால் மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. அந்நாளில் ஐக்கிய நாடுகள் சபையின் தாரக மந்திரமாகிய “Transformative solution for Inclusive Development; the role of innovation in fuelling an accessible and equitable world” அதாவது, “அனைவரையும் உள்ளடக்கிய சமுதாய வளர்ச்சிக்காக, உருமாற்றம் அடையும் தீர்வுகாணல்; மாற்றுத்திறனாளிகள் எளிதில் அணுகும் மற்றும் அவர்களுக்கு சமவாய்ப்பினை நல்கும் சமநிலை உலகினை புது முயற்சிகள் மூலம் ஊக்கப்படுத்தி உருவாக்குதல்” என்கின்ற மையக் கருத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் இவ்வரசு தொடர்ந்து புத்துணர்வோடு செயல்பட்டு வருகிறது.

ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பில் நமது நாடு மேற்கொண்ட ஒப்பந்தம் மற்றும் உறுதிமொழியினை நிறைவேற்ற தமிழ்நாடு அரசு பெரும் பங்காற்றி வருகிறது. குறிப்பாக மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016-னை நடைமுறைப்படுத்துவதன் ஒரு பகுதியாக, தடையற்றச் சூழலை அமைக்கும் பொருட்டு பொதுக் கட்டடங்களில் சாய்வுதளப் பாதை, மின்தூக்கி, மாற்றுத்திறனாளிகளின் உபயோகத்திற்கேற்ற கழிவறைகள் அமைத்தல் ஆகிய பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்து, உரிய தணிக்கைகள், கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணியினை தாமாகவே மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு மாநில விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வரசு, அனைவரையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த சமுதாயத்தினை உருவாக்கும் முயற்சியாக, மாற்றுத்திறனாளிகள் பிறரைச்

சார்ந்திருக்காமல் தன்னிச்சையாகவும், தன்னம்பிக்கையுடனும் செயல்பட தேவையான உதவி உபகரணங்களை அறிமுகம் செய்தும், அதனை கொள்முதல் செய்ய புதிய உற்பத்தியாளர்களை (Startup Companies) ஊக்குவிக்கும் வகையில் கண்காட்சிகளை நடத்தியும், அவர்களுக்கு சமவாய்ப்பு வழங்கியும் வருகிறது. நவீன உதவி உபகரணங்களை கொள்முதல் செய்யும் நடவடிக்கையின் மற்றுமொரு சிறப்பம்சமாக, மாற்றுத்திறனாளிகள் தாங்கள் விரும்பும் உபகரணங்களை தாங்களே தேர்ந்தெடுக்கும் முறையினை (Choice Based System) இவ்வரசு அறிமுகப்படுத்தி அதனை நடைமுறைப்படுத்தி வருகிறது.

மாநில அளவில் மாற்றுத்திறனாளிகளுக்கு முழுமையான திட்டங்களை பல்வேறு அரசு துறைகளுடன் இணைந்து மாற்றுத்திறனாளிகளின் பங்கேற்புடன் அவர்களுக்கு அணுகத் தகுந்த அமைப்புகளை உருவாக்கி, வாய்ப்புகளை அதிகரிக்கும்

நோக்குடன் "உரிமைகள் திட்டம்" செயல்படுத்தப்படுகின்றது.

மாற்றுத்திறனாளிகளுக்கான சமூகப் பதிவினை உருவாக்க ஏதுவாக, முதற்கட்டமாக பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களில் கிடைக்கப்பெற்ற தரவுகளை ஒன்றிணைத்து 9,08,000 தரவுகள் கொண்ட தளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகளின் விவரங்களை மின்னணுமயமாக்கி, இத்தளத்தில் 14 இலட்சம் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது சிறப்பு நேர்வாக மேற்கண்ட தரவுகளின் நம்பகத் தன்மையினை உறுதி செய்யும் பொருட்டு ஆதார் எண்ணுடன் இணைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களது தேவையின் அடிப்படையில் உதவிகளை செய்வதற்கும், உரிய மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கும், அவர்களின் சரியான இருப்பிடம்

மற்றும் அவர்களது மாற்றுத்திறன் வகையினை அறியும் பொருட்டு கணக்கெடுக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான சேவைகள் அரசின் பல்வேறு துறைகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, குழந்தைப் பருவத்தில் அவர்களது குறைபாட்டினை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, அவர்களுக்கு மருத்துவம் மற்றும் மறுவாழ்வு பயிற்சிகளை அளிக்க அரசின் பன்னிரெண்டு துறைகளின் சேவைகளை ஒருங்கிணைத்து நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் (Standard Operating Procedure) அரசாணை (நிலை) எண்.30, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-3.1)த் துறை, நாள் 04.11.2022-இல் வெளியிடப்பட்டு, அதனை செயல்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2023-2024-ஆம் நிதியாண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத் துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ.1106.49 கோடி தொகையானது

இதுவரை இத்துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகைகளிலேயே மிகவும் அதிகமானது என்பதன் வாயிலாக மாற்றுத்திறனாளிகளின் நலனில் இவ்வரசு கொண்டுள்ள பற்றினை உறுதி செய்கிறது.

**2. மாற்றுத்திறனாளிகளுக்கான சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டை வழங்குதல் (NIDC Card)**

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்ட விதிகள், 2018-இல் வரையறுக்கப் பட்டுள்ளவாறு, அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்ட அளவிலான மருத்துவமனைகளில் பணிபுரியும் சான்றளிக்கும் அதிகாரமுடைய மருத்துவர்களால் 21 வகையான மாற்றுத்திறனுடையோருக்கு மாற்றுத்திறனாளி சான்று வழங்கப்பட்டு வருகிறது.

அ. மருத்துவச்சான்றின் அடிப்படையில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரால் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய

அடையாள அட்டை மற்றும் உதவி புத்தகங்கள் தகுதியுடையவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

ஆ. இதுநாள்வரை, தமிழ்நாட்டில் 14,27,979 மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றுத் திறனாளிக்கான சான்றிதழ்கள் மற்றும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 3. உரிமைகள் திட்டம் ('RIGHTS' Project)

சமூகப் பாதுகாப்பு திட்ட அமைப்புகளின் திறனை மேம்படுத்தி கடைக்கோடியில் வசிக்கும் மாற்றுத்திறனாளிகள், தங்களுக்கு தேவையான சுகாதார, சமூக பராமரிப்பு சேவைகள், நலத்திட்டங்கள் ஆகியவற்றினைப் பெறுவதை 'உரிமைகள் திட்டம்' உறுதி செய்கிறது. குறித்த நேரத்தில் தகுந்த திட்டமிடல் மூலம் மாநிலத் திறனைக் கட்டமைத்து, பல்வேறு நிலைகளில் உள்ள நிர்வாக நடைமுறைகளில் காணப்படும் இடைவெளிகளைக் களைந்து, ஆதார் எண்ணை அடிப்படையாகக் கொண்டு, மாற்றுத்திறனாளிகளின் சமூகத் தரவு தளத்தை உருவாக்கி, அவர்களுக்கான சமூகப்

பாதுகாப்பு திட்டங்கள் செயல்படுத்தப்படும். சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு சேவைகள், எளிதில் பயன்படுத்தக் கூடிய சுகாதாரக் காப்பீட்டு சேவை, திறன் மேம்பாடு, வேலைவாய்ப்புத் திட்டங்களை மாற்றுத் திறனாளிகள் பெறுவது இத்திட்டத்தின் மூலம் உறுதிபடுத்தப்படும்.

இத்திட்டம், உலக வங்கியின் உதவியுடன் ரூ.1773.87 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. முதற்கட்டமாக, 5 மாவட்டங்களில் சென்னை (மூன்று மண்டலம்), திருச்சிராப்பள்ளி, தருமபுரி, கடலூர், தென்காசி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். இத்திட்டம் 2023-2024-ஆம் நிதியாண்டில் மேலும் 10 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

இதற்காக மாநில, மாவட்ட அளவில் ஒப்பந்த அடிப்படையிலான ஆலோசகர்கள் மற்றும் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், வட்டார மற்றும் கிராம அளவில் அனைத்து அரசு துறைகளின் குறிப்பாக, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை,

பள்ளிக் கல்வித் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, சுகாதாரத் துறை ஆகிய துறைகளின் களப்பணியாளர்களுடன் இணைந்து இத்திட்டத்தினை செயல்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த சேவை மையத்தினை உருவாக்குதல், ஊதியம், பயிற்சி, கணக்கெடுப்பு, நடமாடும் சேவை மையம் அமைத்தல் ஆகிய நடவடிக்கைகளுக்காக கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு அரசு ரூ.1700.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின் செயலாக்க கையேடு, செயலாக்கத் திட்டம், பல்துறை கட்டமைப்பின் ஒரு பகுதியாக 18 வயதுக்குட்பட்ட மாற்றுத்திறனாளி குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு மறுவாழ்வு சேவைகளை வழங்குவதற்கான நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட நெறிமுறைகளின் மூலம் பயனாளிகளைக் கண்டறியவும், அனைத்து கட்டங்களிலும்

அவர்களுக்கு சேவைகளை வழங்கவும் மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத் துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், பள்ளிக்கல்வித் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ஆகிய துறைகளில் உள்ள பணி செயல்பாட்டு முறைகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு அரசாணை (நிலை) எண்.30, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-3.1)த் துறை, நாள் 04.11.2022-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இப்பணிகள் நிறைவுற்றதன் தொடர்ச்சியாக 13.12.2022 அன்று முதல் “உரிமைகள் திட்டம்” நடைமுறைக்கு வந்துள்ளதாக உலகவங்கி ஏற்றுக் கொண்டது.

மாநில, மாவட்ட அளவில் “உரிமைகள் திட்டத்தை” செயல்படுத்த ஏதுவாக பல்வேறு துறைகளின் ஒருங்கிணைப்பை உறுதிபடுத்துவதற்காகவும், திட்ட அணுகுமுறைக்கான வழிகாட்டுதலுக்காகவும் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் தலைமையிலான மாநில அளவிலான திட்ட வழிகாட்டுதல் குழுவும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் செயலாளர்

தலைமையிலான திட்ட செயலாக்கக் குழுவும், மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்டச் செயலாக்கக் குழுவும் அரசாணை (நிலை) எண்.27, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள் 21.12.2022-இன் கீழ் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டு, இதன் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

உரிமைகள் திட்டத்தில் பங்கேற்கும் மாநில அளவிலான பங்குதாரர்களின் கூட்டம், முதற்கட்டமாக சென்னையில் 13.02.2023 அன்று நடத்தப்பட்டது. அதில் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நல அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டு உரிமைகள் திட்டம் குறித்த தங்களது ஆலோசனைகளை வழங்கினர். இதனைத் தொடர்ந்து, இதுபோன்ற மாவட்ட அளவிலான கூட்டங்கள் முதற்கட்டமாக நடத்தப்பட்டு வருகின்றன. இணை துறைகள் மற்றும் செயலாக்க அலகுகளுக்கிடையே இத்திட்டம் குறித்த விளக்கக்கூட்டம் நடைபெற்றுள்ளது. மேலும்,

அடிப்படை கணக்கெடுப்பு குறித்த பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இதற்கிடையில், பல்வேறு துறைகளின் திறன் விவரணையாக்கப் பணி விளக்கக் கூட்டம் நடத்தி முடித்து, மாவட்ட செயல்திட்டத்தை உருவாக்குமாறு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட செயலாக்கக் குழுவிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் உட்கோட்ட அளவிலான மாற்றுத் திறனாளிகள் நல மையங்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றன. நடமாடும் சிகிச்சை பிரிவு வாகனங்கள் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கான சேவைகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 4. மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016

கடந்த 2016-ஆம் ஆண்டில் ஒன்றிய அரசால் இயற்றப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டமானது, 19.04.2017 அன்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இச்சட்டத்தினை மாநில அளவில் செயல்படுத்திட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் நியமிக்கப்பட்டு, மாற்றுத்திறனாளிகள் அணுகத்தக்க சூழ்நிலை கொண்ட, அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தில் சம உரிமை பெற்று, சுயமரியாதையுடன் வாழ தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்சட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளவாறு, மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியம் ஏற்படுத்தப்பட்டு, முறையாக முதல் கூட்டம் நடத்தப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கிடவும், அவர்கள் எளிதில் அணுகுவதற்கு உகந்த தடையற்றச் சூழல்களை ஏற்படுத்தவும், சமவாய்ப்புக் கொள்கைகளை வெளியிடவும் வலியுறுத்தி அரசாணை வெளியிடப்பட்டு, அவை கள அளவில் நடைமுறைப்படுத்தப்படுவது தொடர்ந்து

கண்காணிக்கப்பட்டு வருகின்றது. மேலும், இத்தகைய நடவடிக்கைகளை கண்காணிக்கவும், மாநில அரசுக்கு உரிய ஆலோசனைகளை வழங்கி, இப்பணிகளை சிறப்பாக செயல்படுத்தவும், உயர்மட்டக் குழுக்கள் அரசு தலைமைச் செயலாளர் தலைமையில் தனியார் நிறுவனங்களுக்காகவும், மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் அரசு செயலாளர் தலைமையில் அரசு நிறுவனங்களுக்காகவும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டு, இச்சட்டத்தில் வலியுறுத்தப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் மாவட்ட அளவில் செயல்படுத்துவதை கண்காணிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படும்போது, அதனை இச்சட்டத்தின் பிரிவு 82-இன் கீழ் விசாரித்து உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ள "மாநில ஆணையர் நீதி மன்றம்" ஏற்படுத்தப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 169 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 102 வழக்குகளுக்கு

தீர்வு காணப்பட்டு, 67 வழக்குகள் விசாரணையில் உள்ளன. மாற்றுத்திறனாளிகளுக்கு எதிரான வன்கொடுமைகளை விசாரிக்க மாவட்ட அளவில் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தை சிறப்பு நீதிமன்றமாக அரசு அறிவித்துள்ளது. தற்போதுள்ள மனித உரிமைகளுக்கான சிறப்பு அரசு வழக்கறிஞர்கள் அனைவரையும் இந்த சட்டத்தின் கீழ், வழக்குகளை கையாள்வதற்காக சிறப்பு அரசு வழக்கறிஞர்களாக நியமித்து, அரசால் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மாநில அரசின் முழு பங்களிப்புடன் பொதுக் கட்டடங்களில் தடையற்றச் சூழலை மேற்கொள்ள ஏதுவாக சென்னை மாவட்டத்தில் 72 கட்டடங்களுக்கு ரூ.12.45 இலட்சம் செலவினத்திலும், மாநிலம் முழுவதும் உள்ள 10 நகரங்களில் 176 கட்டடங்களுக்கு ரூ.44.84 இலட்சம் செலவினத்திலும் தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் அனைத்து பொது இடங்களிலும் மாற்றுத்திறனாளிகள் உபயோகத்திற்கு

உகந்த தடையற்றச் சூழல்களை அமைக்கும் விதமாக மின்தூக்கி அமைத்தல், சாய்வுதளம் அமைத்தல், கழிவறை அமைத்தல், பார்வை மாற்றுத் திறனாளிகளுக்கான தரைப்பரப்பு, பிரெய்லி எழுத்து தகவல் பலகைகள் பொருத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும் கூட்டங்கள் மற்றும் முக்கிய நிகழ்வுகளின்போது செவித்திறன் மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில், அந்தந்த மாவட்ட நிர்வாகம் மூலம் சைகை மொழிபெயர்ப்பாளர்கள் மாற்றுப்பணிகள் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதற்காக மாவட்டத்திற்கு ரூ.15,600/- வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016-இன் பிரிவு 32-இல் வலியுறுத்தியுள்ளபடி, அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்கல்வி

நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையின்போது, மாற்றுத்திறன் மாணவ / மாணவியர்களுக்கு ஐந்து சதவிகித இடங்களும், உச்ச வயது வரம்பில் ஐந்தாண்டுகள் தளர்வும் அளிக்கப்படுகிறது.

## 5. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை பதிவு செய்தல் மற்றும் அங்கீகாரம் அளித்தல்

மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016-இன் சட்டப்பிரிவு 50-இல் வலியுறுத்தியுள்ளவாறு, மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக செயல்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை பதிவு செய்யும் அதிகாரம் மாற்றுத்திறனாளிகள் நல ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்கீழ், இதுநாள் வரை 660 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில், தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் ஒழுங்குமுறைச் சட்டம், 1973 மற்றும் விதிகள் 1974-இன் கீழ் அங்கீகாரம் பெற்ற 393 சிறப்பு பள்ளிகளும் அடங்கும்.

## 6. மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள்

பிறந்தது முதல் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஆரம்ப நிலையிலேயே அவர்களது உடல் குறைபாட்டினை கண்டறிந்து அதனை உரிய பயிற்சிகள் மூலம் குணப்படுத்தும் / கட்டுப்படுத்தும் மையங்கள் ஆரம்ப நிலை பயிற்சி மையங்களாகும். ஒவ்வொரு மாற்றுத்திறனுக்கும் தனித்தனியாக செயல்படும் வகையில் மொத்தம் 92 மையங்கள் மாநிலம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

மாநிலம் முழுவதும் செவி மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு 33 மையங்களும், அறிவுசார் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு 31 மையங்களும், பார்வை மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு 6 மையங்களும், புற உலகசிந்தனை மாற்றுத் திறனுடையோருக்கு 19 மையங்களும், மூளை முடக்குவாத மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு சென்னை மற்றும் திருச்சி மாவட்டங்களில் 2 மையங்களும் செயல்பட்டு வருகின்றன.

இம்மையங்கள், 2588 குழந்தைகள் பயன்பெறும் வகையில் 304 சிறப்பு ஆசிரியர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

இம்மையங்களில் குழந்தைகளுக்கு பேச்சுப் பயிற்சி, தசைப்பயிற்சி, தொழில்முறைப் பயிற்சி உள்ளிட்ட மறுவாழ்வு பயிற்சிகளும், பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கு பராமரிப்பு மேற்கொள்வதற்கான பயிற்சியும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இம்மையங்களில் பயன்பெறும் குழந்தைகள், அவர்களின் பெற்றோர்கள் / பாதுகாவலர்கள் வருடமொரு முறை இன்பச் சுற்றுலா அழைத்து செல்லப்படுகிறார்கள். பகல் நேரம் மட்டும் பராமரிக்கப்படும் இம்மையங்களில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் மூலம் இணை உணவு, மதிய உணவு வழங்கப்படுகிறது. இம்மையத்திற்கு வருகை தரும் குழந்தைகள் அவர்களது பெற்றோருடன் வந்து செல்லும் வகையில் கட்டணமில்லா பேருந்து சலுகையும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

## அட்டவணை எண்: 1
## ஆரம்பநிலைப் பயிற்சி மையங்கள்

| ஆரம்ப நிலைப் பயிற்சி மையங்கள் | மையத்தின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை | சிறப்பு ஆசிரியர்களின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு 2023-2024 (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| செவி மாற்றுத் திறனாளிகளுக்கான ஆரம்ப நிலைப் பயிற்சி மையம் | 33 | 683 | 63 | 151.84 |
| அறிவுசார் மாற்றுத் திறனாளிகளுக்கான ஆரம்ப நிலைப் பயிற்சி மையம் | 31 | 1321 | 140 | 328.44 |
| பார்வை மாற்றுத் திறனாளிகளுக்கான ஆரம்ப நிலைப் பயிற்சி மையம் | 6 | 113 | 12 | 24.60 |
| மூளை முடக்குவாத மாற்றுத் திறனாளிகளுக்கான ஆரம்ப நிலைப் பயிற்சி மையம் | 2 | 58 | 7 | 13.38 |
| புற உலக சிந்தனை மாற்றுத் திறனாளிகளுக்கான ஆரம்ப நிலைப் பயிற்சி மையம் | 19 | 395 | 80 | 142.38 |

| | | | | |
|---|---|---|---|---|
| பல்வகை மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான ஆரம்பநிலைப் பயிற்சி மையம், மண்டல வள மற்றும் பயிற்சி மையம், திருச்சிராப்பள்ளி | 1 | 18 | 2 | 3.84 |
| ஆரம்பநிலைப் பயிற்சி மையங்களில் உள்ள குழந்கைகள் ஒரு நாள் சுற்றுலா செல்வதற்கான திட்டம் | - | - | - | 7.46 |
| அறிவுசார் மாற்றுதிறன் குழந்தைகளுக்கான ஆரம்பநிலைப் பயிற்சி மையத்தில் பணிபுரியும் சிறப்பாசிரியர்களுக்கு புத்தாக்கப்பயிற்சி | - | - | - | 4.73 |
| ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் கீழ் இணை உணவு மற்றும் மதிய உணவு வழங்குவதற்கான போக்குவரத்துச் செலவினம் | - | - | - | 3.45 |
| **மொத்தம்** | **92** | **2588** | **304** | **680.12** |

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்காக ரூ.721.40 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 680.12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனங்கள்

மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் பராமரிப்புச் சேவைகளை கிராம அளவில் கொண்டு சேர்க்கும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனங்கள் இயக்கப்படுகின்றன. அனைத்து சிகிச்சை உபகரணங்களை உள்ளடக்கிய நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனங்கள் மாற்றுத்திறனாளிகளின் இல்லங்களுக்கே சென்று சேவைகளை வழங்கி வருகின்றன. இதன்மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கான முகாம்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. மேலும், குழந்தைகளுக்கு தசைப் பயிற்சி, பேச்சுப் பயிற்சி, சிறப்பு கல்வி உள்ளிட்ட மறுவாழ்வு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்சேவையின் மூலம் திட்டம் தொடங்கியது முதல் இதுநாள்வரை

16,961 முகாம்கள் நடத்தப்பட்டு 1,37,277 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் ரூ.187.54 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.243.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 8. ஆதரவற்ற மனநலம் சார் மாற்றுத் திறனாளிகளுக்கான மீட்புத் திட்டம்

இத்திட்டத்தில், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் சாலையோரங்கள் மற்றும் பொது இடங்களில் சுற்றித் திரியும் மனநலம் சார் மாற்றுத்திறனாளிகள் அவர்களின் குடும்பத்தினரால் கைவிடப்பட்ட நிலையில் இருந்தால், அவர்களை மீட்டு, அவர்களுக்கு முதலில் மருத்துவச் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு பின்னர் மறுவாழ்வு இல்லங்களில் சேர்க்கப்படுகின்றனர். இச்சேவையை செயல்படுத்தும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு

இத்திட்டத்தில் நபர் ஒன்றுக்கு ரூ. 1,500/- வீதம் வழங்கப்படுகிறது.

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் ரூ.7.50 இலட்சம் செலவில் 514 நபர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9. மறுவாழ்வு இல்லங்கள்

### 9.1. அறிவுசார் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு இல்லங்கள்

பதினான்கு வயதிற்கு மேற்பட்ட அறிவுசார் மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்விற்காக தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் மாநிலம் முழுவதும் 70 மறுவாழ்வு இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களில் உள்ளுறையாளர்களுக்கு தங்குமிடம், உணவு, மருத்துவ வசதிகள் வழங்குவதுடன் தோட்டக்கலை, மெழுகுவர்த்தி தயாரித்தல் மற்றும் அடுமனை போன்ற

தொழில்கள் செய்வதற்கான தொழிற்பயிற்சியும் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் ரூ.791.51 இலட்சம் செலவில் 2800 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.794.46 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**9.2. மனநலம் சார் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு இல்லங்கள்**

மாநிலம் முழுவதும் மனநலம் சார் மாற்றுத் திறனாளிகளுக்காக 76 இல்லங்கள் 4,983 பயனாளிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களில் தங்கி பயன்பெறும் உள்ளுறையாளர்களுக்கு மருத்துவச் சிகிச்சை, இலவச தங்குமிடம் ஆகியவற்றுடன் சேர்த்து உணவூட்டு மானியமாக நபர் ஒன்றுக்கு மாதந்தோறும் ரூ.1,200/- வழங்கப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 76 இல்லங்களில், 56 இல்லங்கள் அரசின்

நிதியுதவியினை பெறுகின்றன. மீதமுள்ள 20 இல்லங்கள் சுய நிதி இல்லங்களாக செயல்பட்டு வருகின்றன. மேலும் மாவட்ட மனநல மருத்துவர் மாதமொருமுறை இவ்வில்லங்களுக்கு சென்று இல்லவாசிகளை மனநல பரிசோதனை செய்து மருத்துவச் சிகிச்சை மேற்கொண்டு உரிய சான்றிதழ்களை வழங்குகிறார்.

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் ரூ.714.07 இலட்சம் செலவில் 2,800 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.715.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**9.3. இடைநிலை பராமரிப்பு மையங்கள்**

மனநலம் சார் மாற்றுத்திறனாளிகளை சமுதாயத்துடன் ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டு இடைநிலை பராமரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மதுரை, இராமநாதபுரம்,

திருப்பத்தூர், திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி ஆகிய ஐந்து மாவட்டங்களில் 700 பயனாளிகள் தங்கி பயன்பெறும் வகையில் இம்மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மையங்களில், மனநலம் பாதிக்கப்பட்டு, குணமடைந்து, குடும்பத்தினரால் கைவிடப்பட்டவர்களுக்கு மருத்துவச் சிகிச்சைகளும், தொழிற்பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் 136 பயனாளிகள் ரூ.116.66 இலட்சம் செலவில் இவ்வில்லங்களில் தங்கி பயன்பெற்று வருகின்றனர்.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.125.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9.4. தொழுநோய் சார்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு இல்லங்கள்

தொழுநோய் சார்ந்த மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்விற்காக மறுவாழ்வு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. சமூகப் புறக்கணிப்பை எதிர்கொள்ளும் குடும்பத்தினரால் கைவிடப்பட்ட நிலையில் உள்ள

தொழுநோய் சார்ந்த மாற்றுத்திறனாளிகள் தாங்களாக முன்வந்து, அனுமதி கோரும் பட்சத்தில், அவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். மாநிலம் முழுவதும் பத்து மாவட்டங்களில் அரசு மறுவாழ்வு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களில் 616 உள்ளுறையாளர்கள் தங்கி பயன்பெற்று வருகின்றனர். உள்ளுறையாளர்களுக்கு இலவச உறைவிடம், ஆண்டிற்கு இரண்டு இணை ஆடைகள், மருத்துவ வசதிகள், தேவைப்படுவோருக்கு செயற்கை அவயங்கள், போர்வைகள், கண் கண்ணாடிகள், MCR காலணிகள் ஆகியவை வழங்கப்படுகின்றன. உள்ளுறையாளர்கள் இறக்கும் பட்சத்தில், ஈமச்சடங்கிற்காக ரூ.2,000/- அரசால் வழங்கப்படுகிறது. பொது இடங்களில் இரவல் கேட்கும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட நிலையில் அவர்களின் மறுவாழ்விற்காக கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் செயல்பட்டு வரும் அரசு மறுவாழ்வு இல்லத்தில் அனுமதிக்கப்படுகின்றனர். தொழுநோய் சார்ந்த

மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு மறுவாழ்வு இல்லங்களின் விவரங்கள் பின்வருமாறு:-

**அட்டவணை எண்: 2**

**தொழுநோய் சார்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு இல்ல இருப்பிடங்கள்**

| வ. எண் | இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | பரனூர் | செங்கல்பட்டு |
| 2. | உளுந்தூர் பேட்டை | கள்ளக்குறிச்சி |
| 3. | பர்கூர் | கிருஷ்ணகிரி |
| 4. | புதுக்கோட்டை | புதுக்கோட்டை |
| 5. | மனையேறிப்பட்டி | தஞ்சாவூர் |
| 6. | யா. புதுப்பட்டி | மதுரை |
| 7. | மல்லவாடி | திருவண்ணாமலை |
| 8. | செல்லியம்பட்டி | தர்மபுரி |
| 9. | தேவியாகுறிச்சி | சேலம் |
| 10. | விண்ணபள்ளி | ஈரோடு |

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் 616 பயனாளிகள் ரூ.1,553.03 இலட்சம் செலவில் இவ்வில்லங்களில் தங்கி பயன்பெற்று வருகின்றனர்.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.1,559.78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9.5. அறிவுசார் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான பகல்நேர பராமரிப்பு மையங்கள்

அறிவுசார் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில், தேனி மாவட்டத்தில், 90 குழந்தைகளுக்காக மூன்று பகல்நேர பராமரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்கள் அரசின் நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. இம்மையங்களில் பணிபுரிபவர்களில் இரண்டு சிறப்பாசிரியர்கள் / சிகிச்சையாளர்கள், பராமரிப்பு உதவியாளர், துப்புரவுப் பணியாளர் ஆகியோர் அரசின் நிதியுதவியுடன் பணிபுரிந்து வருகின்றனர். இங்கு பணிபுரியும் சிறப்பாசிரியர்களுக்கு மாதந்தோறும் ரூ.14,000/- மதிப்பூதியம் வழங்கப்பட்டு வந்த நிலையில் அதனை அரசு உயர்த்தி தற்போது மாதந்தோறும் ரூ.18,000/- மதிப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான அரசாணை (நிலை) எண்.7,

மாற்றுத்திறனாளிகள் நல (மா.தி.ந1)த்துறை, நாள்.18.05.2022 அன்று வெளியிடப்பட்டது.

இதற்காக கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில், ரூ.16.44 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.14.52 நிதி இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 9.6.தசைச்சிதைவு நோய் சார் மாற்றுத் திறனாளிகளுக்கான பகல்நேர பராமரிப்பு மையங்கள்

சென்னை, திருச்சிராப்பள்ளி, வேலூர், மதுரை, திருவண்ணாமலை, சேலம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், விழுப்புரம், திண்டுக்கல், விருதுநகர், தர்மபுரி, தஞ்சாவூர் ஆகிய 14 மாவட்டங்களில் தசைச்சிதைவு நோய் சார் மாற்றுத்திறனாளிகளுக்கான பகல்நேர பராமரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இம்மையங்களில் தசைப்பயிற்சியாளர்களை கொண்டு தசைப்பயிற்சி மற்றும் அடிப்படை மருத்துவப்

பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்மையங்கள் அரசின் நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் செயல்பட்டு வருகின்றன.

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் ரூ.220.33 இலட்சம் செலவில் 335 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.196.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9.7.முதுகு தண்டுவடம் சார் மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வு இல்லங்கள்

முதுகு தண்டுவடம் சார் மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்விற்காக, முதற்கட்டமாக திருப்பூர், கோயம்புத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ரூ.100.00 இலட்சம் செலவில் 75 நபர்கள் பயன்பெறும் வகையில் மூன்று சிறப்பு இல்லங்கள் அமைக்க நிர்வாக ஒப்புதலுக்கான அரசாணை (நிலை) எண்.16, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-1)த் துறை, நாள் 28.06.2022-இல்

வெளியிடப்பட்டு, இல்லங்கள் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**10. மாநில வள மற்றும் பயிற்சி மையங்கள்**

மாற்றுத்திறனாளிகள் ஒரே இடத்தில் பல்வேறு சேவைகளைப் பெறும் விதமாக மாநில வள மற்றும் பயிற்சி மையங்கள் சென்னை மற்றும் திருச்சியில் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் மாற்றுத்திறனாளிகளின் சேவைகள் குறித்த பல்வேறு தகவல்கள் வழங்கப்படுவதுடன் அவர்களுக்கான மருத்துவச் சான்றிதழ், தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டைகள் (UDID card) வழங்குதல், பேருந்து பயணச்சலுகை அட்டை, வருமான வரிச்சலுகை சான்றிதழ், தேர்வு எழுத உதவியாளர் நியமனம், தேர்வின்போது கூடுதல் நேரத்திற்கான சலுகை சான்றிதழ் ஆகியவை இம்மையத்தின் மூலம் வழங்கப்படுகின்றன. இம்மையத்தில் ஒன்றிய, மாநில அரசால் வழங்கப்பட்டு வரும் திட்டங்கள் பற்றிய அனைத்து தகவல்களும் அளிக்கப்படுகின்றன. இம்மையங்களில், குழந்தைகளுக்கான ஆரம்பநிலை

குறைபாடுகளைக் கண்டறிந்து, அவற்றை கட்டுப்படுத்துவதற்கான பயிற்சிகள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், மனநலம் சார் மாற்றுத்திறனாளிகளுக்கு பகல்நேர பராமரிப்பு மையத்தின் மூலம் திறன் சார் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இம்மையங்களில் ஆண்டுதோறும் சுமார் 7,584-க்கும் அதிகமான பயனாளிகள் பயன்பெற்று வருகிறார்கள்.

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில், ரூ.47.23 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில், ரூ.35.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 11. சிறப்புக் கல்வி

### 11.1. சிறப்புப் பள்ளிகள்

மனிதவள மேம்பாட்டிற்கு அடிப்படையான கல்வியினை மாற்றுத் திறனாளிகளுக்கு

வழங்குவதற்காக 22 அரசு சிறப்புப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இத்துடன் அரசின் நிதியுதவியுடன் 49 அரசு சாரா நிறுவனங்கள் மூலமும் சிறப்புப்பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் 5,697 மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். இதில் 1,086 மாணவர்கள் அரசு சிறப்புப் பள்ளிகளிலும், 4,611 மாணவர்கள் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் பயன்பெற்று வருகின்றனர்.

### 11.2. அரசு சிறப்புப் பள்ளிகள்

22 அரசு சிறப்புப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உணவு, தங்குமிடம், கல்வி உபகரணங்கள், நான்கு இணைச்சீருடைகள் ஆகியவை ஆண்டுதோறும் விலையில்லாமல் வழங்கப்பட்டு வருகின்றன. இச்சிறப்புப் பள்ளிகளில் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய வகுப்பறைகள் (Smart Class) அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, செவி மாற்றுத்திறன் குழந்தைகளுக்காக தொடுதிரையுடன் கூடிய கணினியுடன் இணைந்த எழுத்துப் பலகை

பொருத்தப்பட்டு, மாணவர்களுக்கு எளிய முறையில் படக்காட்சியுடன் பாடங்கள் நடத்தப்படுகின்றன. இதைப் போலவே, பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கும் மின்னணு சாதனங்கள் மூலமாக பிரெய்லி எழுத்துக்கள் கற்பிக்கப்படுகின்றன. இத்தகைய வசதிகள் பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான 10 சிறப்புப் பள்ளிகளிலும், கல்வித்துறை மூலம் செயல்படும் இரண்டு பள்ளிகளிலும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் ரூ.100.08 இலட்சம் செலவில் 2021-2022-ஆம் நிதியாண்டில் அறிமுகம் செய்யப்பட்டது. மாற்றுத்திறன் குழந்தைகளின் உடல் நலத்தினை மேம்படுத்துவதற்காக உணவூட்டு மானியத்தை அதிகரித்தும், கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்காகவும், சிறப்பு குழந்தைகள் தங்கள் மாவட்டத்திலேயே உயர்கல்வி பெறுவதற்காகவும் உரிய நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றாக, புதுக்கோட்டையில்

செயல்படும் அரசு செவி மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான நடுநிலைப் பள்ளியினை உயர்நிலைப் பள்ளியாகவும், ஈரோடு மற்றும் விருதுநகரில் செயல்படும் செவி மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தி ரூ.36.43 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், இச்சிறப்புப் பள்ளிகளில் கட்டடங்களை பராமரிக்கவும், சீரமைப்பதற்காகவும் ரூ.200.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 11.3. அரசு சாரா தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சிறப்புப் பள்ளிகளுக்கான நிதியுதவி

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பெறும் சிறப்பு பள்ளிகளில் பணிபுரியும் சிறப்பாசிரியர்களுக்கான ஊதிய மானியம், மாணவ / மாணவியர்களுக்கான உணவூட்டு மானியம், பள்ளி

கட்டட விரிவாக்கம், வாடகை மானியம் போன்றவற்றிற்காக அரசு ஒவ்வொரு வருடமும் நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் பணிபுரியும் 996 சிறப்பாசிரியர்களின் சேவையினை ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு வழங்கி வந்த மாதாந்திர மதிப்பூதியத்தை ரூ.14,000/–லிருந்து ரூ.18,000/-ஆக உயர்த்தி, 2022-2023-ஆம் நிதியாண்டில் ரூ.2086.49 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில், ரூ.2610.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறப்புக்கல்வி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர உணவூட்டு மானியம் ரூ.900-லிருந்து ரூ.1200/-ஆக உயர்த்தி 2022-2023-ஆம்

நிதியாண்டில் ரூ.741.43 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில், ரூ.946.17 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 11.4. கல்வி உதவித்தொகை

மாற்றுத்திறனாளிகளின் சிறப்புகல்வியினை ஊக்குவிக்கும் நடவடிக்கையாக, மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை அவர்கள் பயிலும் வகுப்புகளுக்கு ஏற்றவாறு ஆண்டுதோறும் ரூ.1,000/- முதல் ரூ.7,000/- வரை கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது:-

## அட்டவணை எண்: 3
## கல்வி உதவித்தொகை

| வ. எண் | மாணவர் நிலை | வருடாந்திர உதவித்தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | 1 முதல் 5 வகுப்பு வரை | 1,000/- |
| 2. | 6 முதல் 8 வகுப்பு வரை | 3,000/- |
| 3. | 9 முதல் 12 வகுப்பு வரை | 4,000/- |
| 4. | இளங்கலை பட்டப்படிப்பு | 6,000/- |
| 5. | தொழிற்படிப்பு மற்றும் முதுகலை | 7,000/- |

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் 22,368 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.755.38 இலட்சம் செலவில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில், ரூ.690.52 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 11.5. வாசிப்பாளர் உதவித்தொகை

ஒன்பதாம் வகுப்பு முதல் முதுகலை பட்டப்படிப்பு வரை கல்வி பயிலும் பார்வை மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு அவர்களது பாடங்களை வாசிப்பதற்கு உதவக் கூடியவர்களுக்கு வருடத்திற்கு ஒருமுறை வாசிப்பாளர் உதவித்தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது:-

**அட்டவணை எண்: 4**
**வாசிப்பாளர் உதவித்தொகை**

| வ. எண் | மாணவர் நிலை | வருடாந்திர உதவித் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | 9 முதல் 12 வகுப்பு வரை | 3,000/- |
| 2. | இளங்கலை பட்டப்படிப்பு | 5,000/- |
| 3. | தொழிற்படிப்பு மற்றும் முதுகலை | 6,000/- |

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் 1,639 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.69.83 இலட்சம் செலவில் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில், ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 11.6. தேர்வெழுத உதவுவோருக்கான உதவித்தொகை

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் பயிலும் மாணவர்களுக்கு தேர்வு எழுத வசதியாக ஒவ்வொரு தேர்விற்கும் ஒரு உதவி எழுத்தாளருக்கு, தாள் ஒன்றுக்கு ரூ.300/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் ரூ.27.72 இலட்சம் செலவில் 558 மாணவ / மாணவியர்கள் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில், ரூ.44.85 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 11.7. இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டு வழங்கப்படும் ஊக்கத்தொகை

மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்கள் பள்ளிக் கல்வியை இடைநிற்காமல் தொடர ஊக்குவிக்கும் வகையில், 10, 11 மற்றும் 12-ஆம் வகுப்பு பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு ஆண்டொன்றிற்கு ரூ.1,500/- முதல் ரூ.2,000/- வரையிலான ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகின்றன. இத்தொகையானது, தமிழ்நாடு மின் நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் வரவு வைக்கப்பட்டு, 12-ஆம் வகுப்பு முடித்த பிறகு வட்டியுடன் சேர்த்து வழங்கப்படுகிறது.

**அட்டவணை எண்:5**

**இடைநிற்றலை தவிர்ப்பதற்கான ஊக்கத்தொகை**

| வ. எண் | வகுப்பு | வருடாந்திர ஊக்கத்தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | 10-ஆம் வகுப்பு | 1,500/- |
| 2. | 11-ஆம் வகுப்பு | 1,500/- |
| 3. | 12-ஆம் வகுப்பு | 2,000/- |

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் 1,448 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.24.38 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.24.05 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**11.8. சட்டம் பயின்ற பட்டதாரி மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கான உதவித் தொகை**

சட்டப்படிப்பு பயின்று, வழக்குரைஞர் மன்றத்தில் பதிவு செய்துள்ள மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு சட்டப் புத்தகங்கள் வாங்கவும், இதர செலவினங்களுக்காகவும் ரூ.50,000/- உதவித்தொகையானது வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் 60 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.30.00 இலட்சம் செலவில் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**11.9. செவி மற்றும் பேச்சு மாற்றுத்திறன் மாணவர்களுக்கான பி.காம்., பி.சி.ஏ., பட்டப்படிப்பு**

செவி மாற்றுத்திறன் மாணவ/ மாணவியர்களுக்கு மேல்நிலை கல்வியை முடித்த பிறகு அவர்கள் உயர்கல்வி பயில்வதற்கு ஏதுவாக, சென்னை மாநிலக் கல்லூரியில் பி.காம்., பி.சி.ஏ., வகுப்புகளில் சிறப்பு பிரிவு ஏற்படுத்தப்பட்டு வருடந்தோறும் ஒவ்வொரு பாடப்பிரிவிலும் அதிகபட்சமாக 30 மாணவ / மாணவியர்களைக் கொண்டு பாடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

செவி மாற்றுத்திறன் மாணவ / மாணவியர்களுக்கு கல்வி கற்பிக்கும் மூன்று கௌரவ விரிவுரையாளர்கள் மற்றும் ஒரு கணினி ஆய்வக தொழில்நுட்பாளருக்கு மாதந்தோறும் முறையே

ரூ.20,000/- மற்றும் ரூ.6,000/- தொகுப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

தென் மாவட்டங்களில் உள்ள செவி மாற்றுத்திறன் மாணவர்களின் உயர்கல்விக்காக இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் செயல்பட்டு வரும் அரசு கலைக் கல்லூரியில் பி.காம்., பி.சி.ஏ., வகுப்புகள் தொடங்குவதற்காக அரசாணை (நிலை) எண்.18, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, நாள் 04.07.2022-ல் ஆணை வெளியிடப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் ரூ.17.41 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.19.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 11.10. இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா கல்வி ஆராய்ச்சி நிறுவனம் (RKMVERI), கோயம்புத்தூர்

கோயம்புத்தூர் இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா – கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் Disability Management and Special Education (DMSE) மற்றும் General and Adopted physical Education and Yoga (GAPEY) ஆகிய பாடப்பிரிவுகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு கற்பிக்கும் சிறப்பு ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம் கடந்த 2021-2022–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, ஆண்டுதோறும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

கடந்த 2022-2023 ஆம் நிதியாண்டில் இப்பயிற்சியினை அளிக்க ஏதுவாக 21 விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாதோர் பணியமர்த்தப்பட்டு, அவர்களுக்கான ஊதியம் மற்றும் இதர நிர்வாகச் செலவினங்களுக்கு ரூ.178.00 இலட்சம் நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.455.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 12. உதவி உபகரணங்கள்

### 12.1. பல்வேறு வகையான உதவி உபகரணங்கள்

மாற்றுத்திறனாளிகள் சுயமாக நடமாடவும், அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தை அமைக்க ஏதுவாகவும், அவர்களின் தேவைக்கேற்ப 23 வகையான உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வரசு பொறுப்பேற்றபின், சிறப்பு நிதி ஒதுக்கீட்டின் மூலம் ரூ.7,076.00 இலட்சம் செலவில், உதவி உபகரணங்கள் வேண்டி காத்திருப்போர் பட்டியலில் உள்ள தகுதி வாய்ந்த 37,660 மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 2022–2023-ஆம் நிதியாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தி 37,762 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, ரூ.5,475.68 இலட்சம் செலவில் உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

## அட்டவணை எண்: 6

## உதவி உபகரணங்கள்

| வ. எண் | உதவி உபகரணங்கள் | மொத்த எண்ணிக்கை | மொத்த தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | துணை ஊன்றுகோல் (Auxiliary Crutches) | 2,107 | 16.01 |
| 2. | முழங்கை ஊன்றுகோல் (Elbow Crutches) | 1,513 | 9.08 |
| 3. | உருப்பெருக்கி (Magnifier) | 111 | 11.31 |
| 4. | பிரெய்ல் கைக்கடிகாரம் (Braille Watches) | 1,637 | 30.04 |
| 5. | கருப்பு கண்ணாடிகள் (Goggles) | 3,735 | 5.60 |
| 6. | ஒளிரும் மடக்குக்குச்சிகள் (Reflective Folding Sticks) | 3,805 | 14.46 |
| 7. | நடைப்பயிற்சி உபகரணம் (Walking device) | 434 | 9.31 |
| 8. | மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டோருக்கான சிறப்பு சக்கர நாற்காலி (Wheel Chair for Cerebral Palsy affected persons) | 748 | 77.79 |
| 9. | நேரடியாக பிறருடன் பேசி தொடர்பு கொள்ள இயலாத நிலையில் உள்ள அறிவுசார் குறைபாடுடைய, புற உலக சிந்தனை இல்லாத மற்றும் மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட | 101 | 26.93 |

| | | | |
|---|---|---|---|
| | குழந்தைகள் மாற்று வழியில் தொடர்பு கொள்ள ஏதுவாக உருவாக்கப்பட்ட மென்பொருளுடன் கூடிய உபகரணம் (Alternative and Augmentative Communication device with AVAZ software) | | |
| 10. | இணைப்புச்சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் (Retrofitted Petrol Scooter for Differently Abled Persons) | 2,850 | 2379.75 |
| 11. | தண்டுவடம் பாதிக்கப்பட்டோருக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் (Specially designed Retrofitted Petrol Scooter for spinal cord affected persons) | 450 | 474.75 |
| 12. | பார்வை மற்றும் செவித்திறன் மாற்றுத்திறனாளிகளுக்கான திறன்பேசிகள் (Smart phone for Hearing and Visually impaired persons) | 7,379 | 999.78 |
| 13. | பார்வை மாற்றுத்திறனாளி மாணவர்கள் பாடங்களை பதிவு செய்து படிப்பதற்கான உபகரணம் (Angel pro daisy player) | 102 | 10.15 |

| | | | |
|---|---|---|---|
| 14. | மூளை முடக்கு வாத குழந்தைகளுக்கான சிறப்பு நாற்காலி (Corner Seat for children with cerebral palsy) | 252 | 18.33 |
| 15. | நெகிழி மூடநீக்கு சாதனம் (Plastic Caliper) | 493 | 40.92 |
| 16. | உலோக மூடநீக்கு சாதனம் (Metal Caliper) | 130 | 11.31 |
| 17. | மின்கலனால் இயங்கும் சக்கர நாற்காலி (Battery Operated Wheel Chair) | 525 | 599.17 |
| 18. | மூன்று சக்கர வண்டி (Tricycle) | 1,419 | 128.42 |
| 19. | மடக்கு சக்கர நாற்காலி (Foldable Wheel Chair) | 1,436 | 113.44 |
| 20. | மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் (Motorised Sewing Machine) | 3,764 | 257.86 |
| 21. | காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக் கருவிகள் (Behind the Ear Hearing Aid) | 4,370 | 170.00 |
| 22. | மின்னணுவடிவில் உள்ள புத்தகங்களை பிரெய்லி எழுத்துக்கள் வடிவில் தொடு உணர்வுடன் அறிய உதவும் வாசிக்கும் கருவி ( Electronic Braille Reader) | 175 | 62.06 |
| 23. | நவீன ஒளிரும் மடக்குக்குச்சி Modular Reflective Folding | 226 | 9.21 |
| | **மொத்தம்** | **37,762** | **5,475.68** |

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில், ரூ.5578.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**12.2. மாற்றுத்திறனாளிகள் தாங்கள் விரும்பும் உபகரணங்களை தாங்களே தேர்ந்தெடுக்கும் முறை**

கடந்த 2021-2022-ஆம் ஆண்டில் மாற்றுத்திறனாளிகள் தாங்கள் விரும்பும் உபகரணங்களை தாங்களே தேர்வு செய்து பயன்பெறும் வகையில் ஐந்து வகையான உதவி உபகரணங்கள் (மூன்று சக்கர வண்டி, சக்கர நாற்காலி, மின்கலன் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலி, காதுக்கு பின்புறம் அணியும் காதொலிக் கருவி, மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம்) புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் அறுதியிட்ட வகை (Assured Model) மானியத்தொகை போக தாங்கள் விரும்பும் உபகரணத்திற்கான கூடுதல் தொகையினை மட்டும் மாற்றுத்திறனாளிகள் செலுத்தி பெறுகின்றனர்.

இத்திட்டத்தில், கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் 118 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

## 13. சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்

மாற்றுத்திறனாளிகளுக்கு சம உரிமைகள் வழங்கப்படுவதை உறுதி செய்வதுடன் அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பும் வழங்குவதை உயர்ந்த நோக்கமாகக் கொண்டு இவ்வரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மொத்த நிதி ஒதுக்கீட்டில் 60 சதவிகிதத்திற்கும் மேலான நிதியானது சமூகப் பாதுகாப்பு திட்டங்களுக்காகவே ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்நிதி ஒதுக்கீட்டில், மாற்றுத் திறனாளிகளுக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டு வரும் ரூ.2,000/- பராமரிப்பு உதவித்தொகை, தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியம் ஆகியவற்றிற்கான நிதி ஒதுக்கீடுகளும் உள்ளடங்கும்.

13.1. பராமரிப்பு உதவித்தொகை

ஐந்து வகையான மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வகையில் மாதம் ரூ.1,500/- பராமரிப்பு உதவித்தொகை வழங்கப்பட்டு வந்த நிலையில் அதனை ரூ.2,000/- ஆக உயர்த்தி அரசாணை (நிலை) எண்.4, மாற்றுத்திறனாளிகள் நலத் (மாதிந-1) துறை, நாள் 15.03.2022-இல் ஆணை வெளியிடப்பட்டு, தற்போது அத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக 2,11,391 நபர்களுக்கும் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் இருந்த 25,065 பயனாளிகளுக்கும் சேர்த்து மொத்தம் 2,36,456 பயனாளிகளுக்கு ரூ.52,757.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பயனடைந்த பயனாளிகளின் எண்ணிக்கை பின்வருமாறு:-

## அட்டவணை எண்: 7
## பராமரிப்பு உதவித்தொகை பயனாளிகள்

| வ. எண் | மாற்றுத்திறனாளியின் வகை | வகைப்பாடு (மாற்றுத்திறன் சதவிகிதம்) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | அறிவுசார் மாற்றுத்திறன் | 40% மற்றும் அதற்கு மேல் | 1,76,369 |
| 2. | கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத்திறன் | 75% மற்றும் அதற்கு மேல் | 41,124 |
| 3. | முதுகு தண்டுவடம் / தண்டுவடம் மறப்பு நோய் மற்றும் பார்கின்சன் நோயால் மாற்றுத்திறன் | 40% மற்றும் அதற்கு மேல் | 2,928 |
| 4. | தசைச்சிதைவு நோய் மாற்றுத்திறன் | 40% மற்றும் அதற்கு மேல் | 4,451 |
| 5. | தொழுநோய் மாற்றுத்திறன் | 40% மற்றும் அதற்கு மேல் | 11,584 |
| | | **மொத்தம்** | **2,36,456** |

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.5,6749.44 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 13.2. அதிக உதவி தேவைப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகை

இத்திட்டத்தில், அதிக உதவி தேவைப்படும் மாற்றுத்திறனாளிகள் தங்களுடன் உதவியாளரை வைத்துக்கொள்ள ஏதுவாக ரூ.1,000/- கூடுதலாக மாதாந்திர உதவித்தொகையுடன் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் பிறரைச் சார்ந்து வாழும் நிலையில் உள்ள மாற்றுத்திறனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் 2413 நபர்களுக்கு ரூ.253.17 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.425.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 13.3. படித்த வேலைவாய்ப்பற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான நிவாரணத் தொகை

வேலைவாய்ப்புத் துறையில் வேலைவாய்ப்பு வேண்டி, படித்து முடித்து பதிவு செய்து, ஓராண்டுக்கு மேல் காத்திருக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு,

அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப ரூ.600/- முதல் ரூ.1,000/- வரை மாத உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இவ்வுதவித்தொகையானது அதிகபட்சம் 10 ஆண்டுகளுக்கு அல்லது வேலை கிடைக்கும் வரை இதில் எது முந்தைய நிகழ்வோ அதுவரை வழங்கப்பட்டு வருகிறது. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

**அட்டவணை எண்: 8**

**படித்த வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான நிவாரணத்தொகை**

| வ. எண் | கல்வித் தகுதி | உதவித்தொகை ரூபாயில் (மாதந்தோறும்) |
|---|---|---|
| 1. | 10 ஆம் வகுப்பு முடித்தவர்கள் | 600/- |
| 2. | 12 ஆம் வகுப்பு முடித்தவர்கள் | 750/- |
| 3. | பட்டப்படிப்பு முடித்தவர்கள் | 1,000/- |

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் ரூ.1,325.95 இலட்சம் செலவில் 13,697 நபர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.2,000.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 13.4. திருமண உதவித்தொகை

மாற்றுத்திறனாளிகளை ஒருங்கிணைத்து அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தினை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் முக்கியமாக, மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண உதவித்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், உடல் இயக்க மாற்றுத்திறனாளிகள், பார்வை மாற்றுத்திறனாளிகள், செவி மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட 21 வகையான மாற்றுத் திறனாளிகளை திருமணம் செய்யும் போது இவ்வுதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில்,

மாற்றுத்திறனாளிகளுக்கு திருமாங்கல்யம் செய்ய 8 கிராம் தங்க நாணயம் மற்றும் ரூ.25,000/- ரொக்கத் தொகையும், பட்டயம் மற்றும் பட்டப்படிப்பு முடித்த மாற்றுத்திறனாளிகளுக்கு 8 கிராம் தங்க நாணயத்துடன் ரூ.50,000/- ரொக்கத் தொகையும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் பாதித்தொகை ரொக்கமாகவும், மீதத்தொகையானது தேசிய சேமிப்பு பத்திரமாகவும் வழங்கப்பட்டு வந்த நிலையினை மாற்றி, தற்போது 2022-2023-ஆம் ஆண்டு முதல் முழுத்தொகையும் பயனாளிகளுக்கு ரொக்கமாக வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டிற்கு நான்கு கட்டங்களாக 680 பயனாளிகளுக்கு வழங்குவதற்காக ரூ.267.75 இலட்சம் சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.562.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 13.5. கட்டணமில்லா மற்றும் சலுகைக் கட்டணத்துடன் பேருந்து பயணத் திட்டம்

### 13.5.1. நூறு சதவிகித கட்டணமில்லா பயணம்

மாற்றுத்திறனாளிகள் தங்கள் இருப்பிடத்தில் இருந்து, வேலை நிமித்தமாகவோ, கல்வி பெறுவதற்காகவோ, தொழிற்பயிற்சி மேற்கொள்ளவோ அல்லது மருத்துவ மற்றும் மறுவாழ்வு சிகிச்சை மேற்கொள்ளவோ அரசுப் பேருந்துகளில் பயணம் செய்வதற்காக அரசால் பேருந்து பயணச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் வெள்ளை நிற பெயர்பலகை கொண்ட பேருந்துகளிலும், மாநிலம் முழுவதும் இயங்கும் அனைத்து நகரப் பேருந்துகளிலும் மாற்றுத்திறனாளிகள் தனியாகவும், தனியாக பயணம் செய்ய இயலாதவர்கள் துணையாளர் ஒருவருடனும் எவ்வித கட்டணமுமின்றி பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

மேலும், நகரப் பேருந்துகள் அல்லாத இதரப் பேருந்துகளில் பார்வை மாற்றுத்திறனாளிகள்

100 கிலோ மீட்டர் தூர எல்லைக்குள் எவ்வித நிபந்தனையுமின்றி கட்டணமில்லாமல் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். இத்திட்டத்தில், 2022-2023 ஆம் ஆண்டில் 35,294 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

### 13.5.2. பேருந்து கட்டணங்களில் 75 சதவிகித பயணச்சலுகை

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும், பயண எண்ணிக்கை உச்ச வரம்பு ஏதுமின்றி அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளும் தனியாகவும், தனியாக பயணம் செய்ய இயலாதவர்கள் துணையாளர் ஒருவருடனும், 75 சதவிகித பயண கட்டணச் சலுகை அடிப்படையில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் 100 சதவிகிதம் மற்றும் 75 சதவிகிதம் பயணச் சலுகை வழங்கும் திட்டத்தின் கீழ், ரூ.6,956.43 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் 13.80 இலட்சம் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.6000.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 14. மாற்றுத்திறனாளிகளுக்கு சமூகப் பொருளாதார அதிகாரமளிக்கும் திட்டங்கள்

### 14.1. வேலைவாய்ப்பில் நான்கு சதவிகித இட ஒதுக்கீடு

மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு வேலை வாய்ப்புகளில் நான்கு சதவிகித இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016 –இன் சட்டப்பிரிவு 34 வலியுறுத்துகிறது. அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், வாரியங்கள், உள்ளாட்சி அமைப்புகள், பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் வேலைவாய்ப்புகளில் நான்கு சதவிகித இடஒதுக்கீட்டினை செயல்படுத்த ஏதுவாக தொகுதி 'A', 'B', 'C' மற்றும் 'D' பிரிவுகளில் மாற்றுத்

திறனாளிகளுக்கு பணிபுரிய உகந்த பணியிடங்கள் கண்டறியப்பட்டு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்தகைய நடவடிக்கைகளை கண்காணிக்க மாற்றுத்திறனாளிகள் நலத் துறைச் செயலாளர் தலைமையில் உயர்மட்டக் குழு அரசாணை (நிலை) எண்.13, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-3.2)த் துறை, நாள் 07.06.2022-இல் அமைக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும், அரசுப் பணியிலுள்ள மாற்றுத்திறனாளி பணியாளர்களுக்கு, பதவி உயர்வில் நான்கு சதவிகித இட ஒதுக்கீடு அளித்தல் குறித்த அறிக்கைகளை அளிக்க ஏதுவாக, துணைக்குழு மற்றும் உயர்மட்டக் குழுக்கள் அரசாணை (நிலை) எண்.29, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, நாள் 03.11.2022 மற்றும் அரசாணை (நிலை) எண்.33, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, நாள் 15.12.2022-இல் இவ்வரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மாற்றுத்திறனாளிகளுக்கு தனியார் துறைகளிலும் வேலைவாய்ப்புகள் வழங்குவதை

உறுதிசெய்ய அரசாணை (நிலை) எண்.25, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள்.19.09.2022-இல் தலைமைச் செயலாளர் தலைமையில் உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டு, கூட்டம் நடத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**14.2. ஒன்றியப் பணியாளர் தேர்வாணையத்தின் (UPSC) அகில இந்திய குடிமைப்பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (TNPSC) தொகுதி-I முதன்மைத் தேர்வெழுத ஊக்கத் தொகை**

மாற்றுத்திறனாளிகள் போட்டித் தேர்வு எழுதுவதை ஊக்குவிக்க ஒன்றியப் பணியாளர் தேர்வாணையத்தின் (UPSC) அகில இந்திய குடிமைப்பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (TNPSC) தொகுதி-I முதல்நிலை தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவ / மாணவியருக்கு முதன்மைத் தேர்வெழுத ஊக்கத் தொகையாக ரூ.50,000/- வழங்கப்படுகிறது.

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் 35 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ. 17.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில், ரூ.4.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 14.3. சமவாய்ப்புக் கொள்கை

மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016-இன் பிரிவு 21-இல் வலியுறுத்தியுள்ளதற்கு இணங்க, பொதுத்துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் மாற்றுத்திறனாளிகள் பணிபுரிய ஏதுவாக தடையற்றச் சூழல்களை அமைப்பதற்கும், அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை உறுதி செய்யும் வகையிலும், அந்நிறுவனங்களால் சமவாய்ப்புக் கொள்கை வெளியிடப்படுவதை கண்காணிக்கவும் தொடர் நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 14.4. மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய நிதி மேம்பாட்டுக் கழகம் (NHFDC)

இந்நிறுவனத்தின் மூலம் கடன் பெறும் மாற்றுத்திறனாளிகள் உரிய காலத்தில் கடனைத் திருப்பி செலுத்தும் போது, அந்த கடனுக்கான வட்டித் தொகையினை மாநில அரசே செலுத்துகிறது. தமிழ்நாடு மாநில மத்திய கூட்டுறவு வங்கியானது கடன் வழங்கும் நிறுவனமாக (Channelising Agency) நியமிக்கப்பட்டு, 2022-2023–ஆம் நிதியாண்டில் 12,399 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.5181.00 இலட்சம் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

## 14.5. குறுதொழில் மற்றும் பெட்டிக் கடை துவங்க நிதியுதவி

மாற்றுத்திறனாளிகளுக்கு சுயதொழில் புரிய ஊக்குவிக்கும் வகையில் குறு தொழில் மற்றும் பெட்டிக்கடை தொடங்க விரும்பும் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.25,000/- அல்லது கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இவற்றில் எது குறைவான தொகையோ, அத்தொகை மானியமாக

அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இத்தகைய கடனுதவியை பொதுவாக மாற்றுத்திறனாளிகளுக்கு மட்டுமல்லாமல், அரசாணை (நிலை) எண்.14, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-2)த் துறை, நாள் 17.06.2022–இன்படி, அறிவுசார், புறஉலகசிந்தனை அற்ற மற்றும் தசைச்சிதைவு மாற்றுத்திறனாளிகளின் பெற்றோர்களும் பயனடையும் வகையில் இவ்வரசால் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், 2022-2023-ஆம் நிதியாண்டில் அரசாணை (நிலை) எண்.23, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-2)த் துறை, நாள் 11.08.2022–இன் படி, நகர்ப்புறங்களின் சாலையோரங்களில் தள்ளுவண்டி, நடைபாதை கடை, நகரும் வண்டிகளில் வியாபாரம் செய்யும் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் கடைகளை நடத்த அந்தந்த நகராட்சிகள் மூலம் நகர விற்பனைக் குழு விதிமுறைகளின்படி அனுமதி வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் 2,250 பயனாளிகளுக்கு ரூ.547.14 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில், ரூ.500.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 14.6. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)

பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டமானது, மாற்றுத் திறனாளிகளுக்கு சுய வேலைவாய்ப்பினை உருவாக்குதை ஒரு அம்சமாக கொண்டுள்ளது. இத்திட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் செலுத்த வேண்டிய பங்குத் தொகையான ஐந்து சதவிகித பயனாளியின் பங்குத் தொகையினை தமிழ்நாடு அரசே முழுமையாக செலுத்துகிறது.

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் 56 பயனாளிகளுக்கு ரூ.12.94 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**14.7. வேலை வாய்ப்பற்ற மாற்றுத்திறனாளி இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP)**

சுய வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில், வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பின உருவாக்க பயனாளியின் ஐந்து சதவிகித பங்கு தொகையினை தமிழ்நாடு அரசால் முழுவதும் மானியமாக வழங்கப்படுகிறது.

இவ்வுதவியினைப் பெற மாவட்டத் தொழில் மைய இணையதளம் மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும். இவ்விண்ணப்பங்களை பரிசீலனை செய்து தகுதியுள்ள பயனாளிகள் தெரிவுக் குழுவினரால் தெரிவு செய்யப்படுவர்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் வாயிலாக கடந்த

2022-2023-ஆம் நிதியாண்டில் 96 பயனாளிகளுக்கு சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கான கடன்தொகை மானியம் ரூ.68.00 இலட்சம் இத்திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. அத்துறையானது மாற்றுத்திறனாளிகளுக்கான இலக்கினைக் காட்டிலும் 2022-2023-ஆம் நிதியாண்டில் அதிகமாக மானியம் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் வாயிலாக, கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் 77 பயனாளிகளுக்கு ரூ.12.44 இலட்சம் கடன் தொகை மானியம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில், ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 14.8. ஆவின் விற்பனை மையம் அமைப்பதற்கான நிதியுதவி

மாற்றுத்திறனாளிகள் சுய தொழில் தொடங்குவதனை ஊக்குவிக்கும் முக்கிய

திட்டங்களில் ஒன்றான ஆவின் பாலக விற்பனை மையம் அமைக்கும் திட்டம் அரசால் செயல்படுத்தபட்டு வருகிறது. ஒரு ஆண்டிற்கு 100 பயனாளிகள் பயன்பெறும் வகையில் உருவாக்கப்பட்ட இத்திட்டம் தற்போது ஆண்டிற்கு 200 மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஒரு பயனாளிக்கு ரூ.50,000/-வீதம் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டு முதல், அரசாணை (நிலை) எண்.20, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-2)த் துறை, நாள் 14.07.2022–இன்படி, மாற்றுத்திறனாளிகள் தங்களது வருவாயினை மேலும் அதிகரிக்கும் வகையில், பொதுப் பணித்துறை மற்றும் வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் அரசு வளாகங்களில் ஆவின் பாலக விற்பனை மையம் அமைக்கும் இடத்திற்கான வாடகை மற்றும் முன்பணம் செலுத்துவதிலிருந்து அவர்களுக்கு இவ்வரசால் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் ரூ.79.00 இலட்சம் செலவில் 156 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில், ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 14.9. புத்தகக் கட்டுநர் பயிற்சி

பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயின்றுள்ள பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கு பத்து மாத புத்தகக் கட்டுநர் பயிற்சியானது பூவிருந்தவல்லி அரசுப் பார்வையற்றோர் மேல்நிலைப் பள்ளியில் அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சியில், மாதந்தோறும் ரூ.300/- உதவித்தொகை மற்றும் இலவச தங்கும் வசதியும் அளிக்கப்படுகிறது.

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் 22 நபர்களுக்கு இப்பயிற்சிக்காக ரூ.0.66 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.0.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**14.10. பல்லூடகப் பயிற்சி மற்றும் டிஜிட்டல் புகைப்படப் பயிற்சி**

உடல் இயக்க மாற்றுத்திறனாளிகள் மற்றும் செவி மாற்றுத்திறனாளிகளுக்கு பல்லூடகப் பயிற்சி மற்றும் டிஜிட்டல் புகைப்படம் தயாரிக்கும் பயிற்சியானது சென்னையில் உள்ள தேசிய திரைப்பட மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் ஒரு மாத காலத்திற்கு அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் Final Cut Pro–Digital Non Linear Editing (FCP-DNLW), AVID-Digital Non Linear Editing, நிலைப் புகைப்பட பயிற்சி, ஆடியோ இன்ஜினியரிங், அனிமேஷன் ஆகிய பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தில், ஒவ்வொரு வருடமும் சுமார் 250 மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் ரூ.37.38 இலட்சம் செலவில் 250 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.37.38 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**14.11. பொருத்துநர் பயிற்சி**

சென்னை கிண்டியில் அமைந்துள்ள அரசு தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் செவி மாற்றுத்திறனாளிகளுக்கு இரண்டு ஆண்டு கால பொருத்துநர் பயிற்சி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில், ஆண்டுதோறும் 20 பயனாளிகள் பயன்பெறும் வகையில் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் 20 பயனாளிகளுக்கு ரூ.0.72 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 15. ஒன்றிய அரசின் திட்டங்கள்

### 15.1. தனித்துவம் வாய்ந்த மாற்றுத் திறனாளிகளுக்கான அடையாள அட்டை (UDID Card)

மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவச் சான்றிதழ்கள் வழங்க அந்தந்த மாவட்ட நிர்வாகங்கள் மூலம் சுகாதாரத் துறை, வருவாய்த் துறை, பள்ளிக் கல்வி துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, அவர்களுக்கு தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை வழங்குவதுடன், இதர மறுவாழ்வுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்முகாம்களில் கலந்துகொள்ளும் மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றுத்திறனாளி என்பதற்கான மருத்துவச் சான்றிதழினை இணையதளம் மூலமாக பதிவேற்றம் செய்வதன் அடிப்படையில் ஒன்றிய அரசால் வழங்கப்படும் தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டைகள் (UDID Card) வழங்கப்படுகின்றன.

இதுநாள் வரை, தமிழ்நாட்டில் 6,43,231 மாற்றுத்திறனாளிகளுக்கு தனித்துவம் வாய்ந்த

அடையாள அட்டைகள் (UDID Card) வழங்கப்பட்டுள்ளன.

**15.2.மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் வழங்குதல் மற்றும் பொருத்துவதற்கான உதவித் திட்டம் (ADIP Scheme)**

மாற்றுத்திறனாளிகளுக்கு மாவட்ட அளவில் முகாம்கள் நடத்தப்பட்டு, அதில் அவர்களுக்கு தேவையான உதவி உபகரணங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு ஒன்றிய அரசின் நிறுவனங்களால் வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தினை செயல்படுத்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், மாவட்ட நிர்வாகம், பாராளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையுடன் கருத்துரு சமர்ப்பித்து, ஒன்றிய அரசால் ஏற்கப்படும் நேர்வில் மாவட்ட நிர்வாகம் மூலமாக முகாம்கள் நடத்தப்படுகின்றன.

இத்திட்டத்தில், கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் 11 மாவட்டங்களில் முகாம்கள் நடத்தப்பட்டு, 6,665 பயனாளிகளுக்கு ரூ.727.75

இலட்சம் செலவில் உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 15.3. தீனதயாள் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம் (DDRS)

ஒன்றிய அரசின் இத்திட்டத்தில், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கு முன்பருவக்கல்வி உள்ளிட்ட சிறப்புக்கல்வி, பராமரிப்பு இல்லங்கள், சமுதாயம் சார்ந்த மற்றும் நிறுவனம் சார்ந்த மறுவாழ்வுப் பணிகள், செவித்திறன், பார்வைத்திறன், அறிவுசார், மனநலம் சார்ந்த மாற்றுத்திறனாளிகள் மற்றும் தொழுநோய் மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட பல்வேறு வகையான மாற்றுத்திறனாளிகளுக்கு மறுவாழ்வு சேவைகளை மேற்கொள்வதற்காக நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இந்நிதியுதவி, ஒன்றிய அரசினால் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நேரடியாக வழங்கப்படுகிறது.

கடந்த 2022–2023-ஆம் நிதியாண்டில் 17 நிறுவனங்களுக்கு ரூ.391.25 இலட்சம் நிதியுதவி வேண்டி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

## 15.4. தடையற்றச் சூழலை ஏற்படுத்தும் விழிப்புணர்வு பிரச்சாரம் (சுகம்ய பாரத் அபியான்)

ஒன்றிய அரசின் "சுகம்ய பாரத் அபியான்" (Accessible Inida Campaign) எனும் விழிப்புணர்வு இயக்கமானது, மாற்றுத்திறனாளிகளுக்கு தடையற்றச் சூழல்களை ஏற்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சென்னை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் 49 கட்டடங்கள் தெரிவு செய்யப்பட்டு, 30 கட்டடங்களுக்கு ரூ.4608.94 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தணிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 15.5. மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான தேசிய கல்வி உதவித்தொகை

மாற்றுத்திறனாளி மாணவர்களின் கல்வியினை ஊக்குவிக்க ஒன்றிய அரசால் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான தேசிய கல்வி உதவித்தொகை திட்டத்தின் மூலம் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் உதவித்தொகையினைப் பெற 9-ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.2.5 இலட்சம் எனவும், பட்டயம், இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.6.00 இலட்சம் எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இக்கல்வி உதவித்தொகையினைப் பெற கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் 5,271 மாணவ / மாணவியர்களின் விண்ணப்பங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

## அட்டவணை எண்: 9
## தேசிய கல்வி உதவித்தொகை

| வ. எண் | திட்டத்தின் வகை | உதவித்தொகை விவரம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | மேல்நிலை கல்விக்கு முன் (Pre-Matric) 9 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை | 9,000/- முதல் 14,600/- வரை |
| 2. | மேல்நிலை கல்விக்கு பின் (Post-Matric ) பட்டம் மற்றும் இளங்கலை | 10,100/- முதல் 1,74,700/- |
| 3. | உயர்கல்வி (Top Class) உயர்கல்வி மற்றும் முதுகலை | 47,000/- முதல் 3,40,000/- |

## 16. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் (SDGs)

உலக அளவில் அனைத்து நிலைகளிலும், அனைத்து உயிரினங்களும், வாழ்வியல் ஆரோக்கியமும், வளமையும் பெற்று சிறந்து விளங்க, ஐக்கிய நாடுகள் சபை 2015-ஆம் ஆண்டில் தீர்மானத்தினை வெளியிட்டு 2030-ஆம் ஆண்டிற்குள்

எய்தப்பட வேண்டிய இலக்குகளாக 17 இலக்குகளை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு வறுமையின்மை, பசியின்மை, சிறந்த கல்வி, அனைவரையும் உள்ளடக்கிய சமுதாய அமைப்பினை உருவாக்குவதன் மூலம் சீரான சமுதாயத்தினை உருவாக்குதல் உள்ளிட்ட இலக்குகளை எய்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள பல்வேறு முன்னெடுப்புகளை செயல்படுத்தி வருகிறது.

மாற்றுத்திறனாளிகள் நலனுக்கென வருடந்தோறும் பல்வேறு முயற்சிகளை ஒருங்கிணைப்பதன் வாயிலாக, நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. இந்நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக சமூக பாதுகாப்புத் திட்டங்களுக்கென ஆண்டுதோறும் அதிக அளவிலான நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது.

கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மூலம் இவ்விலக்கினை அடைய அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது:-

1. அரசாணை (நிலை) எண்.4, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-1)த் துறை, நாள் 15.03.2022-இல் மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை ரூ.1,500/-லிருந்து, ரூ.2,000/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.
2. அரசாணை (நிலை) எண்.15, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-1.2)த் துறை, நாள் 28.06.2022-இல் அறிவுசார், மனநலம், மற்றும் கடுமையாக உடல் பாதிப்படைந்த மாற்றுத் திறனாளிகளின் பராமரிப்பிற்காக செயல்படும் பராமரிப்பு இல்லங்களில் பயன்பெறும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர உணவூட்டு மானியம் ரூ.900/-லிருந்து ரூ.1,200/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டது.
3. சிறுதொழில் கடனுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் மானியத்தொகை ரூ.25,000/-யினை மாற்றுத்திறனாளிகளின் பெற்றோருக்கும் நீட்டித்து வழங்கப்பட்டது.

4. மாற்றுத்திறனாளிகளுக்கு தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்திற்கான வயது வரம்பினை 45-லிருந்து 60-ஆக நீட்டிக்கப்பட்டது.
5. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை எய்துவதற்காக ஒருங்கிணைந்த பல்துறை அணுகுமுறையினை மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியம் ஊக்குவிக்கின்றது.

**17. மாநில விருதுகள்**

மாற்றுத்திறனாளிகளுக்கு அளிக்கப்படும் சேவைகளை அங்கீகரிக்கும் வகையில் மாநில அரசு பல்வேறு விருதுகளை வழங்கி கௌரவித்து வருகிறது. இவ்விருதுகள் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 15-ஆம் நாள் சுதந்திர தினத்தன்றும், டிசம்பர் 3-ஆம் நாள் உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தன்றும் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்விருதுகளின் விவரங்கள் பின்வருமாறு:-

## அட்டவணை எண்: 10

## ஆண்டுதோறும் சுதந்திர தினத்தன்று வழங்கப்படும் மாநில விருதுகள்

| வ. எண் | விருதின் பெயர் | விருதின் விவரம் |
|---|---|---|
| 1. | சிறந்த நிறுவனம் (மாற்றுத் திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய தனியார் நிறுவனம்) | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2. | சிறந்த நிறுவனம் விருது (மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை செய்யும் சிறந்த நிறுவனம்) | 10 கிராம் தங்கப் பதக்கம், ரொக்கப் பரிசு ரூ.50,000/- மற்றும் சான்றிதழ் |
| 3. | சிறந்த சமூகப் பணியாளர் விருது (மாற்றுத்திறனாளிகளுக்கு அரும்பணியாற்றிமைக்காக) | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 4. | சிறந்த மருத்துவர் விருது | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ். |
| 5. | சிறந்த மாவட்ட ஆட்சியர் விருது | 10 கிராம் தங்கப் பதக்கம், சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசு ரூ.25,000/- |
| 6. | சிறந்த வங்கிக்கான விருது (மாற்றுத்திறனாளிகளுக்கு அதிக அளவில் வங்கிக் கடன் வழங்கிய சிறந்த மாவட்ட கூட்டுறவு வங்கி) | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ். |

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.7.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை எண்: 11**

**ஆண்டுதோறும் உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று வழங்கப்படும் மாநில விருதுகள்**

| வ. எண் | விருதின் பெயர் | விருதுகள் எண்ணிக்கை | விருதின் விவரம் |
|---|---|---|---|
| 1. | சிறந்த நிறுவனம் | 1 விருது | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2. | சிறந்த சமூகப் பணியாளர் | 1 விருது | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 3. | சிறந்த ஆசிரியர் | 3 விருதுகள் | தலா ஒரு நபருக்கும் 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 4. | சிறந்த பணியாளர் - பணிபுரிபவர் / சுயதொழில் புரிபவர் | 10 விருதுகள் | தலா ஒரு நபருக்கும் 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |

| வ. எண் | விருதின் பெயர் | விருதுகள் எண்ணிக்கை | விருதின் விவரம் |
|---|---|---|---|
| 5. | மாற்றுத் திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய சிறந்த நிறுவனம் | 1 விருது | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 6. | ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பணியாற்றும் சிறந்த ஆசிரியர் | 2 விருதுகள் | தலா ஒரு நபருக்கும் 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 7. | மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துனர் | 2 விருதுகள் | தலா ஒரு நபருக்கும் 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 8. | மாற்றுத் திறனாளிகளக்கு தடையற்ற சூழல் அமைத்த சிறந்த அரசு மற்றும் தனியார் கட்டடம் | 2 விருதுகள் | தலா ஒரு நபருக்கும் 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| **மொத்த விருதுகள்** | | **22 விருதுகள்** | |

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.44.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2022-ஆம் ஆண்டு முதல் மாற்றுத்திறனாளிகளுக்கு தடையற்றச் சூழலை அமைக்கும் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் விதமாக, புதிதாக இரண்டு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்விருதினை வழங்குவதன் மூலம் அரசு, பொதுத்துறை கட்டடங்கள், தனியார் துறை கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு தடையற்றச் சூழல் அமைப்பினை உருவாக்கும் நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

**18. உலக மாற்றுத்திறனாளிகள் தினம்**

ஒவ்வொரு வருடமும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் வழிகாட்டுதலின்படி, டிசம்பர் 3-ஆம் நாளில் உலக மாற்றுத்திறனாளிகள் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்நாளில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு விளையாட்டுப் போட்டிகள் மற்றும்

கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. அவ்விழாவில் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் உள்ளிட்ட நலத்திட்டங்கள் வழங்கப்படுவதுடன், அவர்கள் உற்பத்தி செய்யக் கூடிய கைவினைப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு, விழிப்புணர்வு கண்காட்சிகளும் நடத்தப்படுகின்றன. கடந்த 2022-ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற உலக மாற்றுத் திறனாளிகள் தின விழாவில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் "**நான் முதல்வன்**" திட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் அவர்களது வீட்டிலிருந்தபடியே பொருளீட்டும் வகையில் பணிபுரிய உதவும் மென்பொருளுடன் கூடிய மடிக்கணினி அரசால் வழங்கப்பட்டு, அவர்களுக்கு பயிற்சி வழங்கும் நிகழ்ச்சி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்விழாவில், கள்ளக்குறிச்சி, தென்காசி, செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், மயிலாடுதுறை ஆகிய புதிதாக

தோற்றுவிக்கப்பட்ட ஆறு மாவட்டங்களுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகன சேவைகள் அறிமுகம் செய்யப்பட்டன.

## 19. தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியம்

மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, 2007-ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டது. தற்போது, அரசாணை (ப) எண். 30, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-2)த் துறை, நாள் 12.09.2022-இன்படி, இவ்வாரியமானது மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் தலைமையில் புதிய உறுப்பினர்களைக் கொண்டு மறுசீரமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தில், பத்து வயதிற்கு மேற்பட்ட 10,11,323 மாற்றுத்திறனாளிகள் உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ளனர். இவர்களுக்கு, இவ்வாரியத்தின் மூலம் கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மூக்கு

கண்ணாடி வாங்க உதவித்தொகை, மகப்பேறு மற்றும் கருச்சிதைவுக்கான உதவித்தொகை, விபத்தினால் ஏற்படும் பாதிப்பு மற்றும் மரணத்திற்கான நிவாரணத்தொகை, இயற்கை மரணத்திற்கான ஈமச்சடங்கு உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாரியத்தின் மூலம் வழங்கப்படும் உதவிகளின் விவரங்கள் பின்வருமாறு:-

**அட்டவணை எண்: 12**

**நல வாரிய உதவிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | தனி நபர் விபத்து நிவாரணம் | | |
| | (அ) | விபத்தினால் இறப்பு | ரூ.1,00,000/- |
| | (ஆ) | கை அல்லது கால் இழப்பு இரு கண் பார்வை இழப்பு மற்றும் முழுமையான செயலிழப்பு | ரூ. 1,00,000/- |
| | (இ) | ஒரு கை அல்லது ஒரு கால் அல்லது ஒரு கண் பார்வை இழப்பு அல்லது முழுமையான செயலிழப்பு | ரூ. 50,000/- |
| | (ஈ) | நிரந்தர ஊனம் (ஆ மற்றும் இ தவிர்த்து) | ரூ. 25,000/- |
| 2. | மாற்றுத்திறனாளி நபரின் இறுதிச் சடங்கு | | ரூ. 2,000/- |

| | | | |
|---|---|---|---|
| 3. | மாற்றுத்திறனாளி நபரின் இயற்கை மரணம் | | ரூ. 15,000/- |
| 4. | மாற்றுத்திறனாளியின் மகன் மற்றும் மகள் கல்வி பயில வருடாந்திர உதவித்தொகை | | |
| (அ) | i. | 10- ஆம் வகுப்பு பயிலும் மகள் | ரூ. 1,000/- |
| | ii. | 10- ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மகன் மற்றும் மகள் | ரூ. 1,000/- |
| (ஆ) | | 11- ஆம் வகுப்பு மற்றும் அதற்கு சமமாக பயிலும் மகள் | ரூ. 1,000/- |
| (இ) | i. | 12- ஆம் வகுப்பு அல்லது அதற்கு சமமாகப் பயிலும் மகள் | ரூ. 1,500/- |
| | ii. | 12- ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மகன் மற்றும் மகள் | ரூ. 1,500/- |
| (ஈ) | i. | இளங்கலை பட்டப்படிப்பு பயின்று வரும் மகன் மற்றும் மகள் | ரூ. 1,500/- |
| | ii. | இளங்கலை பட்டப்படிப்பு விடுதியில் தங்கிப் பயிலும் மகன் மற்றும் மகள் | ரூ. 1,750/- |
| | iii. | முதுகலை பட்டப்படிப்பு பயின்று வரும் மகன் மற்றும் மகள் | ரூ. 2,000/- |
| | iv. | முதுகலை பட்டப்படிப்பு விடுதியில் தங்கிப் பயிலும் மகன் மற்றும் மகள் | ரூ. 3,000/- |
| (உ) | i. | சட்டம், பொறியியல், மருத்துவம் , கால்நடை அறிவியல் அல்லது அதற்கு இணையான தொழிற்கல்விப் படிப்பு பயிலும் மகன் மற்றும் மகள் | ரூ.2,000/- |

| | | | |
|---|---|---|---|
| | ii. | விடுதியில் தங்கிப் பயிலும் மகன் மற்றும் மகள் | ரூ. 4,000/- |
| | iii. | தொழிற்கல்வி மற்றும் பட்ட மேற்படிப்பு பயிலும் மகன் மற்றும் மகள் | ரூ. 4,000/- |
| | iv. | தொழிற்கல்வி மற்றும் பட்ட மேற்படிப்பு விடுதியில் தங்கிப் பயிலும் மகன் மற்றும் மகள் | ரூ. 6,000/- |
| (ஊ) | i. | தொழிற்பயிற்சி நிலையம் அல்லது தொழில்நுட்பக் கல்லூரியில் பயிலும் மகன் மற்றும் மகள் | ரூ. 1,000/- |
| | ii. | விடுதியில் தங்கிப் பயிலும் மகன் மற்றும் மகள் | ரூ. 1,200/- |
| 5. | திருமண உதவித் தொகை (கணவன் அல்லது மனைவி ஒருவருக்கு மட்டும்) | | ரூ.2,000/- |
| 6. | பெண் உறுப்பினர்களுக்கு மகப்பேறு நிதியுதவி | | |
| | (அ) | மகப்பேறு | ரூ. 6,000/- |
| | (ஆ) | கருச்சிதைவு / கருக்கலைப்பு | ரூ. 3,000/- |
| | (இ) | அறுவை சிகிச்சை | ரூ. 9,000/- |
| 7. | | மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கு நிதியுதவி | ரூ. 500/- |

கடந்த 2022-2023-ஆம் நிதியாண்டில் ரூ.229.28 இலட்சம் செலவில் 1,539 பயனாளிகளுக்கு

இவ்வாரியத்தின் மூலம் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்காக 2023-2024-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.329.62 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 20. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில், அனைத்து வகையான மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினரும் வருமான உச்ச வரம்பு ஏதுமின்றி மருத்துவ சிகிச்சைப்பெற தகுதியுடையவர்கள் ஆவர். இத்திட்டத்தின் மூலம் மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் ஆண்டொன்றுக்கு ரூ.5.00 இலட்சம் வரை மருத்துவச் சிகிச்சை பெற்று பயன்பெறலாம். மேலும், இத்திட்டத்தின் மூலம் புறஉலக சிந்தனையற்ற, தசைச்சிதைவு, அறிவுசார், செவிதிறன், மூளை முடக்குவாதம், கற்றலில் குறைபாடு, பல்வகை மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு

பராமரிப்பு சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கான செயற்கை அவயங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

**21. புற உலக சிந்தனையற்ற, மூளை முடக்குவாதம், அறிவுசார் மற்றும் பல்வகை மாற்றுத் திறனாளிகளின் நலனுக்கான தேசிய அறக்கட்டளைச் சட்டம், 1999**

இச்சட்டத்தில், புற உலக சிந்தனையற்ற, மூளை முடக்குவாதம், அறிவுசார் மற்றும் பல்வகை மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக பாதுகாவலர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான உள்ளூர் குழுவின் மூலம் (Local Level Committee) பாதுகாவலர் சான்று வழங்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியர் இக்குழுவின் தலைவராகவும், மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக செயல்படும் பதிவுபெற்ற நிறுவனத்தின் பிரதிநிதி மற்றும் மாற்றுத்திறனாளிகளின் பெற்றோர்களின் பிரதிநிதிகள் இக்குழுவின் உறுப்பினர்களாக செயல்படுவார்கள்.

இச்சட்டத்தின் மூலம், இதுநாள் வரை, 3,697 பாதுகாவலர் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 22. புதிய முன்னெடுப்புகள்

### 22.1. வீட்டுமனைப் பட்டா வழங்குவதில் மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை

வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள தகுதியான மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மூலம் வீட்டு மனைப் பட்டா வழங்க அரசாணை (நிலை) எண்.541, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 11.11.2022-இல் ஆணை வெளியிடப்பட்டு, தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதுநாள் வரை 598 மாற்றுத்திறனாளிகள் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர்.

### 22.2. வீடு ஒதுக்கீட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஐந்து சதவிகித இடஒதுக்கீடு

வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு, தகுதியின் அடிப்படையில் வீடு

ஒதுக்கீட்டில் ஐந்து சதவிகிதம் வழங்க அரசாணை (நிலை) எண்.24, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந-3.1)த் துறை, நாள் 12.08.2022-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், நகர்ப்புறங்களில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் 555 மாற்றுத்திறனாளிகளுக்கும், கிராமப்புறங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் 44 மாற்றுத்திறனாளிகளுக்கும் வீடு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவர்களுக்கு ஒதுக்கப்படும் வீடுகள் அவர்கள் பயன்படுத்த ஏதுவாக தரைத்தளத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

### 22.3. மாற்றுத்திறனாளி உலமாக்களின் ஓய்வூதியம் பெறும் வயதினைக் குறைத்தல்

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் மூலம் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு உலமாக்கள் மற்றும் பிற பணியாளர் நல வாரியத்தில் பயன்பெறும் மாற்றுத்திறனாளிகளின் ஓய்வூதியம் பெறும் வயது அரசாணை (நிலை) எண்.46, பிற்படுத்தப்பட்டோர்,

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 15.06.2022-இன்படி, 50-லிருந்து 40-ஆக குறைக்கப்பட்டுள்ளது.

## 22.4. போக்குவரத்து

அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் மாற்றுத்திறனாளிகள் பயணம் செய்யும்போது ஏற்படும் பிரச்சினைகளைக் களைய, ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் தலைமையில் போக்குவரத்துத் துறை அலுவலர்களை உள்ளடக்கிய குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, அவ்வப்போது கூடி, அரசுப் பேருந்துகளில் பயணம் செய்யும் மாற்றுத்திறனாளிகள் வசதியாக பயணம் செய்வதற்கு ஏதுவாக வழிகாட்டுதல்களை வழங்குகிறது. இதனடிப்படையில், போக்குவரத்துத் துறை மூலம் நடத்துநர் மற்றும் ஓட்டுநர்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

## 23. முடிவுரை

மாற்றுத்திறனாளிகளைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு ஒரு சிறு சிரமம் கூட ஏற்பட்டு விடக்கூடாது என்று நினைக்கக்கூடிய அரசாக தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. மேலும், மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக கருணை உள்ளத்தோடு, எப்பொழுதும் இவ்வரசு தொடர்ந்து அவர்களுக்கு துணை நிற்கும்.

மாற்றுத்திறனாளிகளின் நலன் மற்றும் அவர்களது உரிமைகளைக் காக்கவும், ஒருங்கிணைந்த சமுதாயத்தினை அமைத்திடவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள தமிழ்நாடு அரசு தொடர்ந்து முனைப்புடன் செயல்படும்.

மு.க.ஸ்டாலின்
முதலமைச்சர்

## அட்டவணை எண்: 13

## 2023-2024-ஆம் நிதியாண்டிற்கான திட்ட வாரியான நிதி ஒதுக்கீடு


| வ. எண் | சேவைகள்/ பயிற்சி | ரூபாய் (இலட்சத்தில்) | நிதி ஒதுக்கீடு சதவிகிதம் |
|---|---|---|---|
| 1. | தடுப்பு மற்றும் ஆரம்ப நிலை பயிற்சி | 1,056.82 | 0.96 |
| 2. | சிறப்புக்கல்வி திட்டங்கள் | 9,173.02 | 8.29 |
| 3. | வேலை வாய்ப்பு மற்றும் தொழிற்பயிற்சி | 2953.91 | 2.67 |
| 4. | சமூக பாதுகாப்பு திட்டங்கள் (பராமரிப்பு உதவித்தொகை மற்றும் கட்டணமில்லா பயணச்சலுகை, கல்வி நிறுவனங்களுக்கான உதவிகள் உள்ளிட்டவை) | 69,020.93 | 62.38 |
| 5. | உதவி உபகரணங்கள் | 5,787.67 | 5.23 |
| 6. | தடையற்ற சூழல் அமைத்தல் மற்றும் பிற உள்கட்டமைப்பு வசதிகள் | 352.00 | 0.32 |
| 7. | உரிமைகள் திட்டம் | 14,300.00 | 12.92 |
| 8. | இதர இனங்கள் (சம்பளம் மற்றும் இதர நிர்வாக செலவுகள்) | 8,004.61 | 7.23 |
| | **மொத்தம்** | **1,10,648.96** | **100.00** |

## அட்டவணை எண்: 14

## 2020- 2021-ஆம் ஆண்டு முதல் 2023-2024-ஆம் ஆண்டு வரையிலான நிதி ஒதுக்கீடு


| வ. எண் | நிதியாண்டு | ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 2020-2021 | 66,708.02 |
| 2 | 2021-2022 | 81,362.56 |
| 3 | 2022-2023 | 91,712.53 |
| 4 | 2023-2024 | 1,10,648.96 |

2020- 2021 -ஆம் ஆண்டு முதல் 2023-2024-ஆம் ஆண்டு வரையிலான நிதி ஒதுக்கீடு



நிதி ஒதுக்கீடு 2023-2024
நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்)
120000
100000
80000
60000
40000
20000
0
66708.02
81362.56
91712.53
110648.96
2020-2021
2021-2022
2022-2023
2023-2024
நிதியாண்டு

## 2023-2024 ஆம் ஆண்டிற்கான திட்ட வாரியான நிதி ஒதுக்கீடு (சதவிகிதத்தில்)





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 6.6.2022 அன்று மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகத்தில் அனைத்தும் சாத்தியம் அருங்காட்சியகத்தினை துவக்கி வைத்து, மாற்றுத்திறன் குழந்தைகளுடன் கலந்துரையாடினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 3.12.2022 உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று புதிதாக தோற்றுவிக்கப்பட்ட ஆறு மாவட்டங்களுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனங்கள் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டது.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 3.12.2022 உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச மடிக்கணிணி வழங்கி வேலைவய்ப்புகளை உருவாக்கக்கூடிய திறன்பயிற்சி தொடங்கி வைக்கப்பட்டது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 3.12.2022 உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் ஊதா அங்காடி மற்றும் நவீன உதவி உபகரணங்களுக்கான கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.11.2022 அன்று தலைமைச் செயலகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியக் கூட்டம் நடைபெற்றது.



**தண்டுவடம் பாதிக்கப்பட்டோருக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்**



ஏஞ்சல்-ப்ரோ டெய்சி பிளேயர்



மின்கலனால் இயங்கும் சக்கர நாற்காலி

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.